Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை –08 | 20–04–2004 | செவ்வாய்க்கிழமை | ஓசை –62

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9294) 077-6059672

# தியாகதீபம் அன்னை பூபதி நினைவுநாள் தமிழீழமெங்கும் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

தியாக தீபம் அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவு நாளின் இறுதி நாள் நிகழ்வுகள் நேற்று தமிழீழமெங்கும் சிறப்புற நடைபெற்றது.

கிளிநொச்சி அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நேற்றுக்காலை 9மணியளவில் அன்னையின் நினைவு நிகழ்வுகள் சிறப்புற நடைபெற்றுள்ளது. தமிழீழ மாணவர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் ஈழப்பிரியன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா உரைநிகழ்த்தினார். போராளிகள், பொதுமக்கள் என இங்கு பெருமளவானோர் கலந்து கொண்டனர் இதே போன்று கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் அன்னையின் நினைவாக உண்ணாவிரதம் இடம்பெற்றது. இதில் நினைவுரைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திட்டப் பணிப்பாளர் லோரன்ஸ்திலகர், கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் ஏ.வீ.கே.மாணிக்கம், கிளி பிரதேச தலைவர் வேலாயுதம்ஆகியோர் நிகழ்த்தினர்.

மல்லாவி மாவீரர் மண்டபத்தில் காலை 9 மணியளவில் அரசியல் துறையை சேர்ந்த செ.சரண்தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள். பொது அமைப்புக்கள், அரச, அரச சார்பற்றநிறுவனங்களின் பணிப்பாளர்கள்மற்றும் பொதுமக்கள் பெருமளவானோர். கலந்து கொண்டனர்.

பாண்டியன்குளம் பிரதேசத்தில் பாலிநகர் மாவீரர் மண்டபத்தில் கோட்ட தேசிய எழுச்சி பேரவை செயலாளர் சி.சண்முகலிங்கம் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் போராளி கலைச் செல்வன் தலைமையில் நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றது.

முல்லை காவல் துறைப் பணிமனையில் காவல் துறை உறுப்பினர் ராதிகா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவப் படத்திற்கு மலர்வணக்கம் செலுத்தப்பட்டது.

கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயலகத்தில் வலய தேசிய எழுச்சிப் பேரவை

(8ஆம் பக்கம்பார்க்க)

# கருணா விடயத்தில் தலைவரின் அணுகுமுறை உலகிற்கு எமது பலத்தை நிரூபித்துள்ளது!

## பொருண்மிய மதியுரையகத்தின் ஆய்வரங்கில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

**தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்த முயல்கின்ற சக்திகள் எல்லாமே பெரிய மகிழ்வுடன் இருந்த கருணாவின் பிரச்சினையை தேசியத் தலைவர் அவர்கள் மிக நிதானமாக, நுட்பமான முறையில் கையாண்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார். இதனால் இந்தச் சக்திகள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டது. உண்மையில் அது எமது தமிழ்த் தேசியத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடு. கருணாவின் பிரச்சினையை நாங்கள் கையாண்ட விதம் இன்று சர்வதேச ரீதியில் எமது பலத்தை நிரூபித்துள்ளது என பொருண்மிய மதியுரையகத்தின் சர்வதேச கலந்துரையாடலில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

அவர்மேலும் கூறுகையில்; இன்று தென்னிலங்கை அரசியல் குழப்பமான நிலையிலே தான் உள்ளது. கடந்த சமாதான சூழலில் நாம் அரசியல் ரீதியாக, இராஜதந்திர ரீதியாக முன்னெடுத்து வெற்றி கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்களில் கணிசமான வெற்றி பெற்றுள்ளோம். இது சர்வதேச ரீதியில் எமக்குக் கிடைத்த ஒரு அங்கீகாரமாகும்.

இன்று சர்வதேச நாடுகள் சர்வதேச நிறுவனங்கள், சர்வதேச சமூகம் எல்லாம் எமது தாயகத்தையும், எமது தலைமையையும் எமது மக்களையும் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறோம். இதுவரை காலமும் எமது விடுதலைப் போராட்டத்தையும், எமது தலைமையையும் பயங்கரவாத மெனச் சித்திரித்த சர்வதேச சமூகம் அண்மைக் காலத்தில் கருத்தியல் ரீதியான மாற்றத்தைப் பெற்றுள்ளது. இது எமது விடுதலைப் போராட்டத்துக்கும் எமது இனத்துக்கும் ஒரு பெரும் திருப்பு முனையாகவே நாம் பார்க்கிறோம்.

இன்று தென்னிலங்கையின் அரசியல் சூழல் இறுக்கமடைந்து கொண்டு செல்கிறது. இன்றும் பாராளுமன்றத்தில் அரசை அமைக்கின்ற முயற்சியைச் சந்திரிகாவால் பூரணப்படுத்த முடியவில்லை. அது ஒரு நெருக்கடியான கட்டத்துக்கே போய்

(8ஆம் பக்கம்பார்க்க)

## பொருண்மிய மதியுரையகத்தின் சர்வதேச கலந்துரையாடல் ஆரம்பம்

(வட்டுக்கட்டான்)

பொருண்மிய மதியுரையகத்தின் 2004-2006 ற்கான ஐந்து நாள் ஆய்வரங்கின் முதலாம் நாள் ஆய்வரங்கு நேற்றுக் காலை 10.00மணிக்கு ஆரம்பமானது.

பொருண்மியமதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவரத்தினராசா தலைமையில் நிகழ்வு நடைபெற்றது

முதல் நிகழ்வாக அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை மலேசியா நாட்டின் பொருண்மிய பிரதிநிதி திருமதி.மலர் ஐக்கிய இராச்சியத்தின் பொருண்மிய பிரதிநிதி திருமதி.மான் ஆகியோர் ஏற்றினர். மலர் மாலையினை

(8.ஆம் பக்கம்பார்க்க)

## தென்னாபிரிக்க தேர்தல் கண்காணிப்பு; புலிகளின் பங்கேற்புக்கு பாராட்டு

தென்னாபிரிக்க பொதுத் தேர்தல் நீதியாக இடம்பெற புலிகளின் உயர் மட்டக் கண்காணிப்புக்குழுவினர் பெரும் பங்காற்றியுள்ளனர் என்று தேர்தலில் அமோக வெற்றிபெற்ற ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இத்தேர்தலைக் கண்காணிக்க புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான ஐந்துபேர் கொண்ட உயர் மட்டக்குழுவினர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தார்கள். இடம்பெற்று முடிந்த தென்னாபிரிக்க பொதுத் தேர்தல் குறித்து புலித்தேவன் அங்கு ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றினார். இலங்கையின் பொதுத் தேர்தல் ஒருபோதும் நீதியாகவும், அமைதியாகவும் இடம்

(8ஆம் பக்கம்பார்க்க)

## கொடிகாமத்தில் பேருந்து குடை சாய்ந்து பயணி ஒருவர் பலி; ஒன்பது பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

இயந்திரக் கோளாறு காரணமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பயணிகள் பேருந்து ஒன்று குடை சாய்ந்ததில் ஒருவர் பலியாகியதுடன் 9 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று நண்பகல் கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் உள்ள இடைக்குறிச்சியை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் இமயானன் உடுப்பிட்டியைச் சேர்ந்த ந. ரவிக்

(8ஆம் பக்கம்பார்க்க)

## காணாமல் போன மீனவர்கள் நாகப்பட்டினம் கடற்பரப்பில் தரித்து நிற்பதாகத் தகவல்

முல்லைத்தீவு சிலாவத்தையிலிருந்து தொழிலுக்காக கடலுக்கு சென்ற வேளை கடந்த 16ம் திகதி காணாமல்போன இரு மீனவர்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இந்தியாவின் நாகபட்டினம் கடலில் தரித்து நிற்பதாக தகவல் கிடைத்துள்ளது.

மேலும் இவர்களை வள்ளத்துடன் இழுத்து வந்து முல்லைத்தீவில் வைத்து கையளிக்க 50 ஆயிரம் ரூபாய் பணம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம்பார்க்க)

## அமெரிக்க யுத்தக்கப்பல் யு.எஸ்.எஸ்.குஷின் கொழும்பில்

அமெரிக்க யுத்த கப்பலான யு.எஸ்.எஸ்.குஷின் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது-நல்லெண்ண விஜயமாக இது கொழும்பு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது இதில் 300 கடற்படையினர் பயணித்துள்ளனர் அமெரிக்க சிவில் யுத்தத்தின் போது மரணமான வில்லியம் குஷின் என்ற கடற்படைத்தளபதியின் நினைவாக அமைக்கப்பட்ட இந்த கப்பல் நவீன ரக ஆயுத தளபாடங்களை கொண்டுள்ளது

இந்தக்கப்பல் மிகவும் உயர் நவீன

(8ஆம் பக்கம்பார்க்க)

## மகாவலித்துறையை வழங்காவிடின் அமைச்சுக்கள் எதையும் ஏற்பதில்லை

### –ஜே. வி. பி. அரசியல் உயர்பீடம் நேற்றுத்தீர்மானம்

(கொழும்பு)

மகாவலி துறையை நீர்விநியோக வடிகாலமைப்பு அமைச்சின் கீழ்தராவிட்டால், தாம் முழுமையாக 4 அமைச்சுக்களையும் ஏற்கப் போவதில்லை என ஜே.வி.பியின் அரசியல்உயர்பீடம் தீர்மானித்துள்ளது. நேற்று முற்பகல் இக்கட்சியின் உயர்பீடம் கூடி இந்தவிடயத்தை ஆராய்ந்து மகாவலித்துறையை நீர்விநியோக வடிகால் அமைப்பு அமைச்சின் கீழ் உள்ளடக்கவேண்டும் என இதில் அனைவரும் ஒருமித்த தீர்மானத்தை மேற்கொண்டனர்

அதேநேரம் அமைச்சுக்களுக்கு செயலாளர்களை நியமிக்கும் ஏற்பாட்டில், ஏற்கனவே சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளன. இதன்படி இதற்கான நியமிக்கப்பட்ட குழு ஒன்றே அமைச்சு செயலாளர்களை நியமிக்கவேண்டும் என்றும் இதனை சனாதிபதி மறுத்து தனது இஷ்டப்படி அமைச்சு செயலர்களை நியமிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

அதேநேரம் மகாவலித்துறையை ஜே.வி.பிக்கு வழங்கக்கூடாது என

(8ஆம் பக்கம்பார்க்க)

# அல்லைப்பிட்டி சோதனைச்சாவடி கெடுபிடிகள் மனித உரிமை மீறல் எனக் கண்டனம்!

## - போராட்டம் நடத்த ம.உ.அ. திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடிப்பகுதியில் சிறிலங்காக் கடற் படையினரால் மேற்கொள் ளப்பட்டுவரும் சோதனைக்கெடிபிடி கள் அப்பட்டமான தொரு மனித உரி மைமீறல் எனக்கண்டித்துள்ள மனித உரிமை களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான அமைப்பினர் இதற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக் கைகளில் ஈடுபடவும் தீர்மானித் துள்ளனர்.

நேற்று யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய காரியாலய மண்டபத்தில் இடம்பெற்ற இவ் அமைப்பின் கூட்டத்திலேயே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.சிறிபதி தலை மையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் மனிதநேய அமைப்புக்கள் மற்றும் தொண்டர் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது பயணிகளுக்குள்ள போக்குவரவு உரிமைகளை மீறும் விதமாக அல்லைப்பிட்டி சோதனைச் சாவடிப்பகுதியில் கடற்படையின ரால் சோதனைக் கெடுபிடிகள் புரியப் பட்டுவருகின்றன. பாதுகாப்பினை உறுதிசெய்தல் என்ற பெயரில் யுத்த நிறுத்த காலத்திலும் இத்தகைய கெடுபிடிகளை படையினர் மேற் கொண்டுவருவது மனித உரிமை மீறலாகவே காணப்படுகிறது எனச் சுட்டிக்காட்டி தாம்கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மேம்படுத்த லுக்குமான அமைப்பினர் படையி னரின் இந் நடவடிக்கைகளுக்கு எதிர்ப் புத் தெரிவிக்கும் வகையில் கண்டன அறிக்கைகளையும்,உயர் அதிகாரிக ளுக்கு அனுப்பிவைப்பது எனவும் தீர்மானித்துள்ளனர். (33)

# முல்லைமாவட்ட போட்டியாளர் வெற்றி

யாழ்ப்பாணத்தில் பனை அபிவி ருத்திச் சபையின் வெள்ளிவிழா ஆண்டினை முன்னிட்டு நடாத்தப் பட்ட மாபெரும் கண்காட்சியில் முல்லை மாவட்டத்தில் இருந்தும் போட்டியாளர்கள் கலந்து கொண்டு வெற்றியீட்டியுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 22ம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு முல்லைத்தீவு அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்ட பத்தில் முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பரிசில்களை வழங்கி கௌரவிக்க வுள்ளார்.

போட்டிகளில் முதலாம் இடத்தையும் நான் காம் இடத்தையும் இரணைப்பாலை யைச சேர்ந்த செல்வி மத்தியாஸ்-உதய ராணி பெற்றுக்கொண்டார். இரண்டாம் இடத்தை, இரணைப் பாலையைச் சேர்ந்த செல்வி மரி யசீலன்-மேரி கொலஸ்ரிக்காவும் மூன்றாம் இடத்தை சிலாவத்தை யைச் சேர்ந்த செல்வி ரங்கநாதன்-சர்மிளாவும் பெற்றுக்கொண்டனர். (20)


## வரிவிளம்பரம்

### இடமாற்றம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த வெண்ணிலா திரையரங்கம் 12/04/2004 முதல் கரடிப் போக்கு கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித் துள்ளது என்பதை திரைப்படரசிகர்க ளுக்கு அறியத்தருகின்றோம். நேசன் உரிமையாளர். (சி.9372)

### தொடர்பு கொள்ளவும்

பாலியாறு வெள்ளாங்குளத்தை வசிப்பிடமாக கொண்ட செல்லையா-விநாயகம் என்பவரை கடந்த 11 நாட்களாக காணவில்லை எனவே எங்கு இருந்தாலும் உடன் தொடர்பு கொள்ளுமாறு அவருடைய மனைவி கேட்டுக் கொள்கின்றார். தகவல் மனைவி மல்லிகா (4449)

### வகுப்பு ஆரம்பம்

2006ஆம் ஆண்டு கலைப்பிரிவு மாணவர்களுக்கான புவியியல் வகுப்புகள் வெண்ணிலா கல்வி நிலையம் மல்லாவி, ஐடியல் கல்வி நிலையம் பாலிநகர் புதிய கலைக கல்லூரி பாண்டியன்குளம் சனி ஞாயிறு தினங்களில் வகுப்புகள் நடை பெறுகிறது. எஸ்.ஜெயரஞ்சன் (BA.Hons) (சி-9378)


# அத்தியாவசிய சேவைகள் கூட்டம் இன்று நடைபெற மாட்டாது

இன்று கிளி.மாவட்ட அரசெயலக மண்டபத்தில் நடைபெறவிருந்த அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத் தினால் இன்று நடைபெற மாட்டா தெனவும்.

மேற்படி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் எதிர்வரும் 27ம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறுமெனவும் அன்றைய தினம் சகல உறுப்பினர்களையும் இக்கூட டத்தில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. அரச அதிபர் தி.இரா சநாயகம்வேண்டியுள்ளார். (சோ)


## வர்த்தக சங்கம் கிளிநொச்சி

## அறிவித்தல்

கிளிநொச்சி வர்த்தகர் சங்க எல்லைக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களும் கீழ் குறிப்பிடும் ஆவணங்களை தயார் நிலையில் வைத்து 21-04.2004 தொடக்கம் துறைசார்ந்த அதிகாரிகள் பார்வையிட ஒத்துழைப்பு வழங்கும் வண்ணம் மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

01)வரி ஆவணம்
02)அனுமதிச் சான்று
03)கணக்கு பதிவேடுகள் (கொள்வனவு, விற்பனவு)
04)சிட்டை பொத்தகங்கள்
05)ஏனைய கணக்கு பதிவேடுகள். (சி-9453)



## தகவல் தரவும்



கடந்த 21.03.2004 அன்று வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு 8ஆம் வட்டாரம் நோக்கி வருகைதந்த செல்வி கனகலிங்கம் மயூரி வயது 16 என்பவர் காணாமல்போயுள்ளார் தகவல் தெரிந்தவர்கள் திரு.மு.கனகலிங்கம், பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்னும் முக வரியில் தொடர்புகொள்ளவும். (சி-7187)



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த சுபானு வருடம் ஐப்பசி மாதம் 11ஆம் நாள்(28.10.2003) செவ்வாய்க்கிழமை சிவபத மெய்திய எமது குடும்பத் தலைவர்

### அமரர் கணபதிப்பிள்ளை சிவலோகநாதன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் தாரணவருடம் சித்திரை மாதம் 9ஆம் நாள் (21.04.2004)புதன்கிழமை காலை 6.00மணிக்கு வெள்ளாங்குளம் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிரியைகள் சித்திரை மாதம் 11ஆம் நாள் (23.04.2004) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும் இவ்விரு நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

இல.141
பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல். (சி-9377)

அன்னாரின்
குடும்பத்தினர்.


# கலந்துரையாடல்

நீர்ப்பாசன விவசாயத்திட்டத்தின் (நியாப்) முக்கிய கலந்துரையாடல் ஒன்று வரும் 22ஆம் திகதி வியாழக் கிழமை நடைபெறவுள் ளது.கிளி நொச்சி அரசாங்க அதிபர் பணி மனையில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ்வொன்று கூட லில் 2002 மற்றும் 2003ம் ஆண்டில் வேலைத்திட்டங்களுக்காக தெரிவாகி திட்டம் நிறைவு பெற்ற கிராமங்களை மக்களிடம் கையளித்தல், திட்டத்தை அமுல்படுத்தும் முகவர்கள் தொடர் பான விடையங்கள், ஜீவனோபாய ஆதார செயற்பாட்டு கடன்வழங்கல் திட்டத்தில் மீளளிப்பு விடயங்கள், நியாப் திட்டம் பகுதி 02 வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல் தொடர் பான விடயங்கள் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்வுள்ளன இதில் பிரதேசசெயலர்களும் நியாப் திட்ட முக்கிய உத்தியோகஸ் தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என மேற்படி திட்டத்தின் சமூக உணர்வூட்டலை மேற்கொள்ளும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சமூக உணர்வூட்டல் பகுதி இணைப்பாளர் இராஜன் தெரிவித்துள்ளார். (ச)

## ஐ.தே.க.தவிசாளர் பதவி விலகல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

தனது பதவி விலகல் கடிதத்தை கட்சி தலைமையிடம் அவர் கைய ளித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசி யக்கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு பொறுப்பேற்றே தான் பதவிவிலகு வதாக அவர் கூறினார்.

ஐ.தே.க.தவிசாளர் பதவிக்கு முன் னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட நியமிக்கப்படலாம் என கட்சி வட்டா ரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (32)

## புதிய செயலாளர் நியமனம்

(கொழும்பு)

விமலசிறி டிமெல் லங்கா சமசமாஜக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக் கிறார் நேற்று முன்தினம் இரவு கூடிய நிறைவேற்றுக் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

திசவிதாரண ஐ.ம.சு. முன்னணியில் அமைச்சுப்பதவியை ஏற்றுக் கொண்டதை எதிர்த்து கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் பதவி துறந்தமை தெரிந்ததே.

# துரித கல்விச் செயற்திட்டத்தை செயற்படுத்தல் குறித்த கருத்தரங்கு

(அலுவலகசெய்தியாளர்)

யுனிசெப் அனுசரணையுடனான துரித கல்வி செயற்திட்டத்தின் கீழ் ஆறாம் ஆண்டு தொடக்கம் 11ஆம் ஆண்டு வரையான வகுப்புக்களின் நடைமுறைப்படுத்தப்படும் துரித கல்விச் செயற்திட்டம் சார்பாக மாணவர்கள் இடர்படும் அலகுகளை இனம் காணலும் அவற்றுக்கான திட்டங்களை செயற்படுத்தல் பற்றிய கருத்தரங்கு பின்வரும் நேரசூசிக்கேற்ப நடை பெறுகின்றது. குறிப்பிட்ட வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வண்ணம் கிளிவலய கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார்.

| காலம் | இடம் | பாடம் | வகுப்பு |
|---|---|---|---|
| இன்று | கல்வி வளநிலையம் | சமூகக்கல்வி,தமிழ் | 7 |
| | கிளி/மத்தியகல்லூரி | கணிதம், விஞ்ஞானம் | 7 |
| | கிளி/கனகபுரம் ம.வி | ஆங்கிலம் | 7 |
| நாளை | கல்வி வளநிலையம் | ஆங்கிலம் | 8 |
| | கிளி/ மத்தியகல்லூரி | தமிழ், சமூகக்கல்வி | 8 |
| | கிளி/கனகபுரம் ம.வி | கணிதம், விஞ்ஞானம் | 8 |
| 22.04.2004 | கல்வி வளநிலையம் | தமிழ், சமூகக்கல்வி | 9 |
| | கிளி/ மத்தியகல்லூரி | ஆங்கிலம் | 9 |
| | கிளி/கனகபுரம் ம.வி | கணிதம், விஞ்ஞானம் | 9 |
| 23.04.2004 | கல்வி வளநிலையம் | கணிதம், விஞ்ஞானம | 10 |
| | கிளி/ மத்தியகல்லூரி | தமிழ், சமூகக்கல்வி | 10 |
| | கிளி/கனகபுரம் ம.வி | ஆங்கிலம் | 10 |
| 24.04.2004 | கல்வி வளநிலையம் | தமிழ், சமூகக்கல்வி | 11 |
| | கிளி/ மத்திய கல்லூரி | ஆங்கிலம் | 11 |
| | கிளி/கனகபுரம் ம.வி | கணிதம்,விஞ்ஞானம் | 11 |

(சோ)

# பாரஊர்திச் சாரதி நெஞ்சு வலியால் மரணம்

(அலுவலக செய்தியாளர்)

யாழில் இருந்து ஓமந்தை நோக்கி நேற்று முன் தினம் சென்று கொண்டிருந்த தனியார் பாரஊர்தி ஒன்றின் சாரதி திடீரென மரணமாகி யுள்ளார்.

வவுனியாவைச்சேர்ந்த வைர முத்து-ஜெயக்குமார் (வயது45) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். மேற்படி வாகனம் ஆனையிற வுப்பகுதியில் வரும்போது சாரதி திடீரென நெஞ்சுவலிப்பதாக கூறிய தாகவும் பின் உடனடியாக அவரை கிளிநொச்சிதனியார் வைத்திய சாலைக்கு அழைத்துவரும் வழியில் திடீரென மரணமடைந்துள்ளார் எனவும் வாகன உரிமையாளர் தெரிவித் துள்ளார் (கு)


## பணி நிலை வேண்டுகை

வன்னிப் பகுதியில் இயங்கும் சிறுவர் இல்லமொன்றிற்குக் கீழ்க்காணும் பணி நிலைகளிற்கு ஆற்றலும் அனுபவமும் வாய்ந்தோர் வேண்டப் படுகின்றனர்.

01) பேணுனர் :-வயதெல்லை :- 24இற்கு மேல்
(பெண்கள்) ஊதியம் :- 5000/-

02) சாரதி:-வயதெல்லை (ஆண்) :- 30இற்கு மேல்
(ஆண்/பெண்) (பெண்) :-22இற்கு மேல்

ஊதியம் பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்படி பணி நிலைகளிற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 25-04-2004 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலத்திற்கு வருகை தரும்படி வேண்டப் படுகின்றனர்.

நிர்வாகம்

(44.50)

# ஹமாஸ் இயக்கம் மீதான நடவடிக்கைக்கு அமெரிக்க சனநாயக கட்சியினர் வரவேற்பு

## -இஸ்ரேலை ஆதரித்து ஜோன் ஹெரி பேச்சு

***பலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்தலைவர் அப்துல் அசீஸ் றன்ரிசி இஸ்ரேலிய படையினரால் படுகொலை செய்யப்பட்டதற்கு அமெரிக்க சனநாயக கட்சி சனாதிபதி வேட்பாளர் ஜோன்ஹெரி வரவேற்றுள்ளார்.***

அமெரிக்க சனாதிபதி தேர்தலில் தற்போதைய சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சை எதிர்த்து போட்டியிடும் இவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக் கைகளை மேற்கொள்ள இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு ஆகும். சமாதான முயற்சிகளை மேம்படுத்த முன்வரவேண்டும் என விடுக்கப்பட்டு வந்த அழைப்பினைத் தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளனர் என்றும் ஹெரி இவ்வேளை சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இஸ்ரேலின் நடவடிக்கைகளை அவர் ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்கள் இருவர் இஸ்ரேலினால் குறுகிய காலத்தினுள் அடுத்தடுத்து படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில் சமாதான முயற்சிகள் பின் தள்ளப்பட்டு வன்முறைகள் வெடிக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில் அடுத்த சனாதிபதியாக வரக்கூடியவரென கருதப்படும் ஜோன்ஹெரி இஸ்ரேலின் நடவடிக்கைகளை ஆதரித்து பேசியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் இயக்கத் தலைவரின் உடலை எடுத்துச்செல்லும் பலஸ்தீனர்கள்.



சண்டைநடைபெறும் ஈராக்கின் அபுகிரைப் பிரதேசத்தின் எல்லையில் அமெரிக்க இராணுவ டாங்கியை க் கடந்து செல்லும் ஈராக்கியர் ஒருவர்.



ஈராக்கில் உசைபா நகரில் நடந்த அமெரிக்க படையினர் முற்றுகையின் போது காயங்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் கண்கள் கட்டப்பட்டு அழைத்துச்செல்லப்படுகின்றார்.



நஜாப் நகரில் சோதனைச் சாவடியருகில் குறிபார்த்துச் சுடும் துப்பாக்கியுடன் நிலையெடுத்துள்ள இராணுவ வீரர்.

# ஈராக்கிலுள்ள தனது தொழிலாளர்களை ரஷ்யா திருப்பியழைக்கின்றது

ஈராக்கிலிருந்து ரஷ்ய தொழிலாளர்கள் 366 பேரை மீண்டும் ரஷ்யா திருப்பி அழைத்துக் கொண்டுள்ளது. ஈராக்கில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களே இவ்வாறு திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாக ரஷ்யா கூறியுள்ளது.

ஈராக்கில் 8 ரஷ்யர்கள் அண்மையில் கடத்தப்பட்டதனை அடுத்தே, ஈராக்கிலுள்ள ரஷ்யப் பிரஜைகள் கட்டம் கட்டமாக திருப்பி அழைக்கப்படுகின்றனர்.

ரஷ்யாவில் இருந்து சென்ற 6 விமானங்கள் பாக்தாத் மற்றும் குவைத் விமான நிலையத்தில் தரையிறங்கி ரஷ்சியர்களை அழைத்து வந்துள்ளன.

ஏற்கனவே 553 பேரும் பின்னர் 263 பேரும் நாட்டுக்கு திருப்பியழைக்கப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் தொழில் பார்த்து வருவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. ஆனால் எத்தனைபேர் இன்னும் திருப்பியழைக்கப்படவுள்ளார்கள் எனும் விபரம் தெரியாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஈராக்கில் இருந்து ரஷ்ய கம்பனிகளில் 55 நிர்வாக முகாமையாளர்களும் 365 நிர்வாக உத்தியோகத்தர்களும் ஏற்கனவோ திருப்பியழைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை 300 ரஷ்யத் தொழிலாளர்கள் ரஷ்யா திரும்பவிரும்பவில்லை என்றும் கூறியுள்ளனர் என்று ரஷ்ய வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

# ஸ்பெயின் படையினரை திருப்பியழைக்க கம்யூனிஸ அரசு அவசர நடவடிக்கை

## -அமெரிக்க எதிர்ப்பிற்கு அலட்சியம்

ஈராக்கிலுள்ள ஸ்பெயின் படையினர் விரைவில் திருப்பியழைக்கப்படவுள்ளார்கள் ஸ்பெயின் புதிய அரசு இதனை மீண்டும் உறுதிசெய்துள்ளது.

அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படையினருடன் இணைந்து பணியாற்றி வரும் ஸ்பெயின் படையினரை அங்கிருந்து மீளப்பெற புதிய கம்யூனிஸஅரசு முடிவு செய்திருந்தமை தெரிந்திருந்ததே.

அமெரிக்கா இதற்கு கடும் [illegible]ரிப்பினை தெரிவித்து வரும் நி[illegible]யில் படையினரை திருப்பியழை[illegible]கும் முடிவில் ஸ்பெயின் இறங்கி [illegible]ருவதாக தெரியவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஸ்பெயின் அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் படைவிலகல் மிக விரைவில் இடம் பெறும் என அறிவித்துள்ளது.

ஈராக்கில் அமெரிக்ககூட்டுப் படையினர் தீவிர வாதிகளின் கடுமையான தாக்குதல்களுக்கு முகம் கொடுத்துவருகின்றதோடு அமெரிக்காவிற்கு சார்பாக செயற்பட்டுவரும் வெளிநாட்டவர்களுக்கு எதிராகவும் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாஜ்பாய்க்கு எதிராக ஜெத் மலானி போட்டி

லக்னோ மக்களவைத் தொகுதியில் இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு எதிராக தான் போட்டியிடப் போவதாக முன்னாள் மத்திய அமைச்சரும் பொது வேட்பாளருமான ராம் ஜெத்மலானி கூறியுள்ளார்.ராம்ஜெத் மலானியைத் தனக்குஎதிராகப் போட்டியிடவேண்டாம்.என பிரதமர் வாஜ்பாய்கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா ஷியா தரப்பினரிடையே நஜாப் பகுதியில் தொடர் மோதல்

ஈராக்கின் நஜாப் பகுதியில் அமெரிக்க கூட்டுப்படையினருக்கும் ஷியா முஸ்லிம் தீவிரவாதிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால்இப் பகுதியில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்கள் அலுவலகங்கள் உட்பட அனைத்தும் மூடப்பட்டு இப்பகுதிகள் வெறிச்சோடிக்காணப்படுவதாக வெளியிடும் தகவல்கள் தெரிவிக்கின்றன.ஷியா முஸ்லிம்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கில் அமெரிக்க படையினர் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதேவேளை திவானியாவில் ஷியா பிரிவினருக்கும்,ஸ்பெயின் படையினருக்குமிடையே தொடர்ந்து துப்பாக்கித் தாக்குதல்கள் இடம்பெற்றுவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈராக்கில் கடந்த இரண்டு வாரங்களாக ஷியா பிரிவினரின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. இதனால் அமெரிக்கப்படையினர் பலர் உயிரிழந்தமை தெரிந்ததே.

# பொடோ மறு ஆய்வுக்குழு அறிக்கை வைகோ மீதான வழக்கின் இறுதித் தீர்ப்பல்ல!

## தமிழக முதலமைச்சர் கூறுகிறார்

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டமை பற்றிய அறிக்கையைத் தான் பொடோ மறு ஆய்வுக்குழு வெளியிட்டுள்ளது. இது தீர்ப்பாக அமையாதென ஜெயலலிதா கூறியுள்ளார்.

மறுஆய்வுக்குழுவின் அறிக்கையை இறுதி தீர்ப்பெனக் கருதி தி.மு.க தலைவர் கருணாநிதி தனக்கு எதிரான கருத்துக்களை உருவாக்கிவருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தையும் நாட்டிலிருந்து அகற்றி இந்திய நாட்டை வல்லரசாக்கவும் வேண்டுமானால் எமது கூட்டணிக்கு வாக்களியுங்கள் என்று நேற்று முன்தினம் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

தேசிய சனநாயக கூட்டணி அரசில் தி.மு.க ஐந்தாண்டு காலம் பதவிவகித்த வேளை. பா.ஜ.க. மதவாத கட்சி என்பது கருணாநிதிக்கு தெரியவில்லை எனவும் அவர் விளக்கியுள்ளார்.

## ஆர்ப்பாட்டம்

ஈராக்கிலுள்ள ஜப்பானிய படையினர் உடனடியாக மீள அழைக்கப்பட வேண்டுமெனக் கோரி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நேற்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமது படையினரை ஈராக்கில் தொடர்ந்து வைத்திருக்க ஜப்பானிய அரசு உறுதிபூண்டுள்ளது.

# பிரிட்டன், போத்துக்கல் நாடுகளில் அல்-ஹைதா தாக்குதலுக்கு திட்டம்

பிரித்தானியா மற்றும் போத்துக்கல் ஆகிய நாடுகள் மீது இஸ்லாமிய மதவாத அமைப்புக்கள் தாக்குதல்களை நடத்தலாமென இஸ்லாமிய மதவாத அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போத்துக்கல்லில் வெளியாகின்ற பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் அல்-ஹைதா அமைப்பில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் இணைந்துள்ளதாகவும் அதே போன்று பல்வேறு அமைப்புக்களும் இத் தாக்குதலை மேற்கொள்ளலாமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதற்கென திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள இளம் தீவிரவாதிகள் குழுவான அல்-ஹைதா ஐரோப்பா எனும் பிரிவினர் தற்போது லண்டனில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.




# சாதனை நாயகன் லாறா

ஒரு இனிங்சில் 400 ஓட்டங்கள் எடுப்பது என்பது சாமானியமான விடயமல்ல, கண்ணும் கருத்துமாக ஆட வேண்டும். சரியான மதிநுட்பம், அர்ப்பணிப்பு உணர்வுதேவை. அத்தோடு கிரிக்கெட்டின் அடிப்படை விதிகளுக்கு மரியாதை கொடுக்கத் தெரிந்திருக்க வேண்டும். இதனையே சாதனை நாயகன் பிறைன் லாறா கிரிக்கெட் உலகிற்கு மீண்டும் ஒரு தடவை பறைசாற்றினார்.

கடந்தவாரம் மேற்கிந்தியத்தீவின் அண்டிகுவா ஜோன்ஸ் மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நிறைவுபெற்ற நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்சில் 400 ஓட்டங்களைப் பெற்றதன்மூலம் இச்சாதனை அவர் கைவசமானது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து அணிக்கு எதிராக இதே மைதானத்தில் 375 ஓட்டங்கள் எனும் தனிநபருக்கான சாதனையை ஏற்படுத்திய லாறா கடந்த ஆறு மாதத்துக்கு முன்னர் அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்டவீரர் மத்தியூ ஹெய்டனிடம் பறிகொடுத்தார்.

அவர் சிம்பாவ்வே அணிக்கு எதிராக 380 ஓட்டங்களை பெற்றார். இதுவே கடந்த 7மாதமாக டெஸ்ட் இனிங்ஸ் ஒன்றில் தனிநபர் பெற்ற அதிகூடிய சாதனை ஓட்டங்களாக இருந்தது.

தற்போது லாறா 400 ஓட்டங்களை ஆட்டம் இழக்காது பெற்றுள்ளமையானது இச்சாதனை தனக்கானதே என்று கிரிக்கெட் உலகிற்கு மீண்டும் ஒருமுறை நிருபித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஏற்கனவே முதல்தர போட்டியில் ஆட்டம் இழக்காது முறியடிக்கப்படாத 501 ஓட்டங்களையும் லாறா பெற்றுள்ளார்.

கிரிக்கெட் உலகம் வியக்கும் இந்த அற்புதமான 400 ஓட்டங்களைக் கடுமையான விமர்சனங்களுக்கு மத்தியில் லாறா பெற்றமை அவரது மனோபலத்திற்கும் அச்சமின்மைக்குமான எடுத்துக்காட்டாக அமைந்துள்ள போதும் அஸ்த்தமனத்தை நோக்கிச்செல்லும் மேற்கிந்தியத் தீவு அணியில் புதுத்தென்பை ஏற்படுத்துமா என்பதே அனைவரதும் கேள்வியாகவுள்ளது.

இச்சாதனைக்கும் மேலாக தனது சொந்த மண்ணில் வரலாற்று தோல்வியை சந்தித்துள்ள லாறாவின் தலைமையில் நடைபெறவுள்ள ஒருநாள் போட்டியில் என்ன செய்யப்போகின்றது என்பதே தற்போது அனைவரதும் எதிர்பார்ப்பு.

ஏனெனில் தமது கடமை, பொறுப்பை சரிவர ஆற்றத்தவறும் வீரர்கள் லாறாவுக்கு ஒத்துழைப்பு வழங்குவார்களா?

கால் கூப்பருக்குப் பின்னர் மீண்டும் அணித்தலைவராக நியமிக்கப்பட்ட லாறா தலைமையிலான அணி ஒரு சில போட்டிகளில் திறமையாக செயற்பட்ட போதும் கடந்த சில மாதங்களாக முன் னேறுவதற்கான முயற்சிகள் எதனை யும் மேற் கொள்ளாமல் திணறிக் கொண்டிருக்கின்றது.

இதனால் அணித் தலைவர் லாறா சோர் வடைந்திருந்தாலும் தனது பங்கை திறமையாக வெளிக் காட்டி வருகின்றார்.



இதுவரை 106 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 9657 ஓட்டங்களைப்பெற்றுள்ள லாறா இதில் 25 நூறு ஓட்டங்களையும் 43 ஐம்பது ஓட்டங்களையும் பெற் றுள்ளதுடன் 138 பிடிகளையும் எடுத் துள்ளார்.

229 ஒரு நாள் போட்டியில் விளையாடியுள்ள லாறா 18 சதங்கள் 53 அரைச் சதங்கள் அடங்கலாக 8533 ஓட்டங்களைப் பெற்றுள் ளார். இதில் அதி கூடிய ஓட்டங்களாக 169 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

229 முதல் தரபோட்டிகளில் விளையாடவுள்ள லாறா 53 சதங்கள் 81 அரைச்சதங்கள் அடங்கலாக 19242 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். அதிகூடிய ஓட்டங்களாக ஆட்டம் இழக்காது 501 ஓட்டங்களையும் பெற்றுள்ளதுடன் 285 பிடிகளையும் எடுத்துள்ளார்.

மேற்கிந்தியதீவுக் கூட்டத்தின் டிரினிடாட் டொபாகோ பகுதியில் உள்ள சிறிய கிராமமான கன்டாராவில் ஆறு சகோதரர்களுடன் பிறந்த லாறாவால் அக்கிராமம் இன்று பெருமை அடைந்துள்ளதுடன் காபியன் தீவே நிமிர்ந்து நிற்கின்றது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னை மரமட்டைகளில் துடுப்பாட்டம் கற்றுவளர்ந்த ஒரு சிறுவன் அதன் பின் சாதனையாளராகவும், இன்று கிரிக்கெட் வரலாற்றில் புதியசாதனையும் படைத்துள்ளார் என்றால் அது போற்றப்படவேண்டியதே.

கிரிக்கெட் வரலாற்றில் அடுத்தடுத்து சாதனை படைப்பது என்பது சாதாரண விடயமல்ல அதனை நிகழ்த்திக்காட்டியுள்ள லாறா வரலாற்றில் அழியாத புகழை தனக்கும் தனது நாட்டுக்கும் தேடிக்கொண்டார்.

சாதனைகள் முறியடிக்கப்படுவதற்கே என்பது யாராலும் மறுக்க முடியாததே, ஆனாலும் லாறாவின் இவ் அரியசாதனையை முறியடிக்கப் போகின்றவர்கள் யார் என்பதே இன்று கிரிக்கெட் உலகம் எதிர்பார்ப்பதாகும்.



# வறுமையில் வாடும் டைசன்

அதிபார குத்துச்சண்டை போட்டிகளில் மகுடம் சூடி அசைக்க முடியாத ஒருவராக உலகை வலம்வந்த மைக்டைசன் இன்று கடன் தொல்லைகளால் அவதிப்படுகின்றார்.

தனக்கு எதிராக போட்டியிடும் வீரர்களை ஈவிரக்கமின்றி தாக்கி சேதப்படுத்தும் ஒருவராக திகழ்ந்த டைசன் கடந்த பல வருடங்களாக தோல்விகளை சந்தித்ததுடன் அதனை சகித்துக்கொள்ள முடியாது போட்டி விதிகளுக்கு முரணாகவும் செயற்பட்டு வந்ததால் போட்டியில் இருந்தும் விலக்கப்பட்டதுடன் பணவருவாயையும் இழந்தார்.

இது அவரை கடனாளியாக்கியதுடன் வறுமைக்கும் இட்டுச்சென்றுள்ளது. கடைத்தெருக்களில் முன்னதாக வாழ்க்கையை ஆரம்பித்த மைக்டைசன் தனது 20வது வயதில் உலக அதிபாரக் குத்துச்சண்டையில் மகுடம் சூடினார்.

[illegible] ஆடம்பர வாழ்க்கையில் ஜொலித்தார். சென்ற இடங்களிலெல்லாம் அவருக்கு மாளிகைகள், ஆடம்பர கார்கள், கணக்கில்லாத செல்போன்கள் ஆயினும் 17 ஆண்டுகளில் அவர் வறுமைக்குள்ளானார்.

அவரது 20வது வயதில் போட்டிகளில் வென்று மகுடம் சூடியதும் அவருக்கு கோடிக்கணக்கான டொலர்கள் கிடைத்தன. பணத்தட்டுப்பாடு என்பது கடுகளவேனும் அவருக்கு கிட்டவில்லை குளியலறைகள் 38 கொண்ட மாளிகையில் அவர் வாழ்ந்தார். அவை வருமானம் ஈட்டித்தரவன்றி புகழை ஈட்டித்தரவே.


இக்காலப்பகுதியில் தனது பெயரை பச்சைகுத்திக் கொண்ட சில நண்பர்களும் அவருக்கு கிடைத்தனர் அவர்கள் அவருக்கு உபதேசம் கூறவந்தவர்களல்ல. அவருடன் கூடிக்குலாவி அவரிடம் இருந்த பணத்தில் குடித்து கும்மாளமிடவே வந்து சேர்ந்தனர். டைசனும் நண்பர்களின்றி ஒருவேளை சாப்பிட்டும் இருக்கவில்லை.

அவருக்கு கிடைத்த பணத்தில் 1996ம் ஆண்டு 18 குளியலறைகளையும் 7சமையலறைகளையும் கொண்ட வீடு ஒன்றை விலைக்கு வாங்கினார். ஆயினும் இவர் அதில் குடியிருந்தது ஒரு இரவு மட்டுமே இதைப்போன்று மேலும் 5 வீடுகளை இவர் விலைக்கு வாங்கினார்.

அக்காலப்பகுதியில் அவருக்கு கார் வாங்கும் பித்துப் பிடித்தது அவர் உலகிலேயே மிகவும் ஆடம்பரமான கார்களை கொள்வனவு செய்தார். அந்தவகையில் பென்ட்லி, மார்சிடஸ் பென்ஸ், BMW,ரககார்களை வாங்கினார். அவ்வாறு அவர் கொள்வனவு செய்த கார்கள் 110 ஆக உயர்ந்தது. இவ்வளவும் தமக்கு ஏன் என அவர் ஒருபோதும் சிந்திக்கவில்லை. இவற்றை ஒரு தடவைக்கு மேல் உபயோகப்படுத்த வுமில்லை.

ஒருநாள் இங்கிலாந்து சென்ற போது ஒன்றரை மில்லியன் டொலருக்கு (ரேசிங்) பந்தயக் கார் ஒன்றை வாங்கினார். அதை வீதிகளில் செலுத்த தடை என்பதை வாங்கிய பின்னரே அவர் அறிந்தார். இவ்வாறு அவர் ஆடம்பரமாக வாழ்ந்தார்.

இவ்வாறு வாழ்ந்த மைக்டைசனின் வாழ்வில் பெண்களின் தலையீடு வந்து சேர்ந்ததால் அவர் தேவையற்ற பிரச்சினைகளிலும் சண்டைகளிலும் சம்பந்தப்பட நேர்ந்ததோடு வழக்கு வம்பு என அவருக்கு கஸ்டகாலம் ஆரம்பமாகியது. அவரது வழக்கறிஞர்கள் அவரிடம் பணத்தைக் கறந்தனர். வழக்குகளும் நீண்டுசென்றன. விவாகரத்து வழக்குகளால் தாபரிப்பு செலுத்த வேண்டியேற்பட்டது. அதற்காக அவர்



செலுத்திய தொகை 17 மில்லியன் டொலர்களாகும். அத்துடன் அவரது வீடுகளும் நட்டஈடாக வழங்க வேண்டியதாயிற்று. செல்போன் கட்டண நிலுவை மாதம் ஒரு மில்லியனாகியது. அவர் ஒரு மாதத்தில் சாதாரண தொலை பேசிக் கட்டணமாக 1 லட்சத்து 44ஆயிரம் டொலர் செலுத்தினார்.

**வடிவேல்**

# இந்தத் தருணம் அவருடையதே

பாகிஸ்தான் மண்ணில் இந்தியாவின் வரலாற்று வெற்றியில் வீரர்களின் தனிப்பட்ட திறமைகள் கொடுத்துள்ள நிலையில் வீரேந்தர் ஷேவாக்கின் முச்சதம் முக்கியத்துவம் பெறுகின்றது.

சாதனைகளைப் பற்றியெல்லாம் நினைக்கவில்லை என்று எல்லா வீரர்களும் சொல்வதும் வழமைதான். ஆனால் ஷேவாக்கிற்கு அவற்றைப் பற்றி அண்மையில் ஒன்றும் தெரியாது டெஸ்டில் மூன்று செஞ்சரி அடித்த முதல் இந்தியர் நானாக இருப்பேன் என்றெல்லாம் அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லையாம். முன்பே யாரும் அடித்திருப்பார்கள் என எண்ணியிருந்தார்.

முல்தான் நகரில் 309 ஓட்டங்களைக் குவித்த அன்று இரவுதான் அவருக்கு அந்த விபரமே தெரியும்.

முன்பு கிராமத்து ரவுடிகளின் புகலிடமாகக்கருதப்பட்ட ஹரியனாவில்சிறு நகரைச் சேர்ந்த மா அரைக்கும் மில் உரிமையாளரின் மகனான ஷேவாக் இந்தியாவின் கிரிக்கெட் நட்சத்திரங்கள் செய்ய முடியாத சாதனையை நிகழ்த்தி இந்தியாவின் இன்றைய நட்சத்திரமாக திகழ்கின்றார் என்றால் மிகையில்லை.

இதன் மூலம் 1954இல் இருந்து பாகிஸ்தானுடன் 20 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி ஒரு போட்டித் தொடரைக் கூட கைப்பற்றாத இந்தியா முதல் முறையாக வெற்றிபெற 72 வருட இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 300 தாண்டிய முதல் வீரரானார்.

தனது துடுப்பாட்டத்தை தொடர்ந்து வீடியோவில் பார்க்கும் ஷேவாக், தான் அடித்த மோசமான காலப்பகுதியைப் பார்த்து கேவலப்படுகிறார். அது வெறும் 5 நிமிடத்துக்குதான் அந்த தவறை மறுமடியும் செய்யக்கூடாது என்று நானே எனக்கு சொல்லிக்கொள்வேன் என்கிறார் ஷேவாக்.

ஆட்டத்திற்கு முன்னதாக ஷேவாக் சில காரியங்களை செய்வார். அமைதியாக 10 நிமிடங்கள் அமர்ந்து எதிரியின் பந்துவீச்சையும் தான் அடிக்க வேண்டிய முறையையும் மனக் கண்ணில் சற்று நேரம் ஒப்பிட்டுப்பார்ப்பார். தன்னுடைய கவனம் சிதறுவதாகத் தெரிந்தால். பழைய பாடல்களை முணுமுணுத்து மனதை ஒருமுகப்படுத் திக்கொள்வாராம்.



துவக்க ஆட்டக்காரராக களமிறங்கும் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு பந்தையும் மதிக்க வேண்டும். அதுவே அவர்களின் உயர் நாதம் ஆனால் ஷேவாக் அதனை பின் பற்றுவதில்லை அடித்தாடுவதில் சிறிலங்காவின் ஜெயசூரியவின் இணையாகத் திகழ்கின்றார்.

இதனைவிட பகுதிநேர பந்து வீச்சாளராக திகழ் வதுடன் அணியின் வெற்றிக்கு பல்வேறு சந்தர்ப்பங் களில் கைகொடுத்து வருகின்றார். குறிப்பாக பாகிஸ் தானுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய அணி வெற்றிபெறுவதற்கு அவரது பந்துவீச்சே காரணம் எனலாம். அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த யூஹானாவை அச்சந்தர்ப்பத்தில் ஆட்டமிழக்கச்செய்து போட்டியில் திருப்தியை ஏற்படுத்தினார்.

டெண்டுல்கர், ராவிட், கங்குலி தலைமுறைக்குப் பின் வந்திருக்கும் தலைமுறைக்கு நன்றாகப் பிரகாசித்துவரும் ஷேவாக் தலைவராக முடி யுமா? தற்போது இதனைக் கேட்ப தற்கு சற்று மிகை யாகத்தான் தோன்றலாம்.ஆனால் இந்தியாவின் முதல் 300 அடித்த ஷேவாக்கிற்கு இந்தத் தரு ணம் அவருடையதாக இருப்பது அவருக்குப் போதுமானது.

# ஒருநாள் போட்டி இன்று

தோல்விகளுக்கும் அவமானங்களுக்கும் பதில் சொல்வதற்கு சிறிலங்கா அணிக்கு வாய்ப்புத் தரும் சிம்பாப்வே அணியுடனான கிரிக்கெட் தொடர் இன்று புலவயாவில் ஆரம்பமாகின்றது.



இதில் கலந்துகொள்வதற்காக மாவன் அத்தப்பத்து தலைமையிலான முன்னணி வீரர்களைக் கொண்ட சிறிலங்கா அணி இன்று களம் இறங்குகின்றது.

சிம்பாப்வே அணியை பொறுத்தவரை அதன் முக்கிய 13 வீரர்கள் இல்லாத நிலையில் இரண்டாவது தர அணி ஒன்றையே அது களம் இறக்கவுள்ளது. அணியில் ஆறு வீரர்கள் சர்வதேச போட்டியில் முதல் தடவையாக களம் இறங்கு கின்றனர்.

இவ் அணிக்கு விக்கெட் காப்பாளர் தைபு தலைமைதாங்குகின்றார்.

ஏற்கனவே பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னாள் அணித் தலைவர் ஹீக்ஸ்ரீக் தலைமையில் 13 வீரர்கள் விளையாட மறுத்ததை அடுத்து போட்டித் தொடர் கேள்விக்குறியான நிலையில் இரண்டாம் தர அணி ஒன்றை சிம்பாப்வே கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதனால் பலம் வாய்ந்த அணி ஒன்று சிம்பாப்வேயிடம் இல்லாத நிலையில் போட்டித் தொடர் சோபை இழக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனுக்கு இப்போட்டித் தொடர் முக்கியத்துவம் பெறுகின்றது. இதுவரை 513 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ள முரளி 519 விக்கெட்டுக்கள் என்ற சாதனை இலக்கை எட்டுவதற்கு 6 விக்கெட்டுக்கள் எஞ்சியுள்ளது.

இது இவ்வாறிருக்க அவுஸ்திரேலியாவுடனான டெஸ்ட் ஒருநாள் தொடரை சொந்த மண்ணில் பறிகொடுத்து விமர்சனங்களுக்கு உள்ளாகி நொந்து போயுள்ள சிறிலங்கா இப் போட்டித் தொடரை சாதகமாக பயன்படுத்தும் என கிரிக்கெட் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

# ஹெலஉறுமய பிக்குகளிடம் சரணாகதி சு.க.வின் பிரச்சினைகள் அதிகரிக்கும் வழி

ஜாதிக ஹெல உறுமய தென்னிலங்கையின் மூன்றாவது சக்தியாக உருவெடுக்குமா? என்ற கேள்வி தேர்தலுக்கு முன் கேட்கப்பட்டது. அதற்கு "ஆம்" என்ற விடை தற்போது கிடைத்துள்ளது. கடந்த பொதுத்தேர்தல்முடிவுகளின் படி மூன்றாவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு இருக்கின்ற போதிலும் தென்னிலங்கையில் ஹெல உறுமய மூன்றாவது அணியாக உருவெடுத்துள்ளமையை தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

அத்துடன் இன்றுள்ள நிலையில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு ஜாதிக ஹெல உறுமய கைவசம் வைத்திருக்கின் ஒன்பது ஆசனங்கள் தேவைப்படுவதும் ஒரு முக்கியமான விடயமாகும். எனவே அதன் வலுவானது இதன் மூலம்மேலும் அதிகரிக்கின்றது. ஆனால் ஜாதிக ஹெல உறுமயவால் தேர்தலில் பாதிக்கப்பட்ட அணியாகவும் மக்கள் ஐக்கிய சுதந்திரமுன்னணியே இருக்கின்றது. இது முன்னரே எதிர்வு கூறப்பட்ட விடயமும்தான். இதற்கு சிஹல உறுமய என்ற தீவிர இனவாதக்கட்சியின் மறுதோற்றமாகவும், இனவாதிகளின் குகையாகவுள்ள பௌத்தமத குருமார் மத்தியிலிருந்து வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டமையும் காரணமாக அமைந்தது.

அத்திட்டங்களைச் செயற்படுத்தினால் ஒரு இலட்சம் இளைஞர்களைப் படைக்குத்திரட்டித் தரத் தயார் என்றும் சிஹல உறுமய தெரிவித்து வந்தது. அவ்வாறு யுத்தத்தை சரிவர நடத்த முடியாவிட்டால் சந்திரிகா அரசாங்கம் பதவி விலகி தம்மை யுத்தம் நடத்த அனுமதிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தது.

இந்நிலையில் 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினரைப் பெற்றது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமக்கு ஆதரவு இல்லையெனத் தெரிந்தும் அங்கும் தமது வேட்பாளரைப் போட்டியிட நிறுத்திய அக்கட்சி இலங்கை முழுவதும் திரட்டிய வாக்குகளின் அடிப் படையில் தேசியப் பட்டியலில் இவ் உறுப்பினரைப் பெற்றது. இந்த உறுப்பினர்கூட பௌத்த சிங்களவராக இருக்க வேண்டும் என்பதில் அது உறுதியாக இருந்தது.

பெயருடன் பௌத்தபிக்குகள் இப்போராட்டங்களில் ஈடுபடத்தொடங்கினர். இந்தத் தேசப்பற்றாளர்களைப் பயன்படுத்திக்கொள்ள ஜே.வி.பி.திட்டமிட்டுச்செயற்பட்டது. தேசப்பற்றாளர் முன்னணி என்ற பெயரில் அமைப்பொன்றை உருவாக்கும் நடவடிக்கைகளிலும் ஜே.வி.பி.ஈடுபட்டது.


ஆனால் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏற்படுத்திக்கொண்ட கூட்டு, மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக் கொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க போர் நிறுத்த ஒப்பந்தத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்க முயன்றமை என்பன இத் தேசப் பற்றாளர்களிடையே குறிப்பாக சிகல உறும யவினர் மத்தியிலும் பௌத்த பிக்குகள் மத்தியிலும் சீற்றத்தை ஏற்படுத்தியது.

ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சிங்கள மக்களிற்கு துரோகம் இழைக்கும் கட்சிகள், சிங்கள மக்களின் நலனில் அக்கறையற்ற கட்சிகள் என்று இனவாதிகள் கருதியதாலேயே 2001 ஆண்டுத் தேர்தலில் கணிசமான மக்கள் குறிப்பாக இனவாதிகள் ஜே.வி.பி.க்கு வாக்களித்தார்கள். இம்முறை ஜே.வி.பி. சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டதன்பின்னர் மூன்றாவது அணியொன்று அவர்களுக்குத் தேவைப்பட்டது.

இதனை நன்கு புரிந்து கொண்ட சிகல உறுமய ஹெலஉறுமய என்ற பெயரில் தனது கட்சி சார்பில் வேட்பாளர்களை நிறுத்தியது. மேலும் தம்மை தெளிவாக இனம்காட்டவும், கடந்த தேர்தலில் கட்சி உறுப்பினர்களை நிறுத்தி தோல்வியடைந்ததன் காரணமாகவும் பௌத்த பிக்குகளை முன்னிறுத்தி 9இடங்களைப் பெற்றுள்ளது.

கட்சிகளும் நினைத்தன. ஆனால் அதில் 5வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளை ஹெலஉறுமய பிரித்துக்கொண்டு விட்டதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

இப்பொழுது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்க ஹெலஉறுமயவே உதவக்கூடிய கட்சியாக இருக்கின்றது. மு.கா, இ.தொ.க. என்பன ஐ.தே.கவுடன் இணைந்து செயற்படு வதற்கான சாத்தியங்கள் குறைவடைந்திருக் கின்றன. எனவே ஹெலஉறுமயவை எதிர்பார்க்க வேண்டிய நிலையிலேயே உள்ளது.





1994 இல் இனவாதம் தோற்கடிக்கப்பட்டு விட்டது. அல்லது இனவாதத்தைத் தோற்கடித்தவர் என்ற போர்வையுடன் பதவி ஏற்ற சனாதிபதி சந்திரிகா நடத்திய " சமாதானத்திற்கான யுத்தம்." அது புலிகளால் தோற்கடிக்கப்பட்டமை சிஹல உறுமய என்ற இனவாதக் கட்சியை வளர்த்துவிட்டது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளைக் கைவிட்டு யுத்தத்தை ஆரம்பித்து அது தோல்விப்பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில், அதாவது ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை தோல்வியைத்தழுவிக்கொண்டிருக்கையில், சிஹல உறுமய என்ற கட்சி எழுச்சி பெற்றது. அவ்வேளையில் சுதந்திரத்திற்குப் பின்னர் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை விசாரிக்க அக்கட்சி ஓர்ஆணைக்குழுவை நியமித்தது.

வர்த்தகர்கள், பிக்குகள்,புத்திஜீவிகள், ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரிகள், படையதிகாரிகள் என தீவிர இனவாதிகள் குழுமமாக இக்கட்சி உருவெடுத்தது. இது யுத்தத்தைத் தீவிரப் படுத்தக் கோரியதோடு யுத்ததிற்குப் பல திட்டங்களை வைத்திருப்பதாகவும்,

இவ்வாறான நிலையில் 2001ஆம்ஆண்டுத் தேர்தலில் தென்பகுதியில் வீசிய சமாதான அலை அல்லது யுத்த எதிர்ப்பு அலை சிகல உறுமயவின் அவ் ஆசனத்தைப்பறித்தது எனலாம்.

பின்னர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் காட்டிய தாமதம் அல்லது தீவிரமான சமாதான நடவடிக்கைகளை மேற்கொண்டால் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் தம்மீது பாய்ந்துவிடுமோ என்று ஐ.தே.க.வின் அச்சம் மீண்டும் இனவாதிகளை வளர்த்தது. இதில் அதிக வளர்ச்சி பெற்றவர்கள் ஜே.வி.பி.யினராகும். சர்வதேசத்தின் நடவடிக்கையாக அமைந்துவிட்ட சமாதான முயற்சிகளுக்கு எதிராக வெளிப்படையாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் செயற்பட முடியாத நிலையில் ஜே.வி.பி. அதனைப் பொறுப்பேற்றுக்கொண்டது. ஆரம்பத்தில் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டங்கள் பிசுபிசுத்த போதிலும் பின்னர் அது வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதற்குப் பௌத்த பிக்குகளின் ஆதரவு பெரும் காரணமாக அமைந்தது. நாட்டுப்பற்றாளர்கள் என்ற

இந்தத் தேர்தலில் பௌத்த பிக்குகள் அணியாகப் போட்டியிடுவதற்கு மகாசங்கங்கள்கூட தீவிர எதிர்ப்புத் தெரிவித்தன. கடந்தமுறை ஐ.தே.க. சார்பில் பிக்கு ஒருவர் போட்டியிட்டபோது கிளம்பாத எதிர்ப்பு இம்முறை ஏற்பட்டது. பல இடங்களிலே பிக்குமார் தாக்கப்பட்டார்கள். இந்தத் தாக்குதல்களில் ம.ஐ.சு.மு ஆதரவாளர்கள் குறிப்பாக ஜே.வி.பி ஆதரவாளர்களே முன்னணியில் இருந்ததாகப் பிக்குகள் குற்றம்காட்டினர்.

இதற்குக் காரணம் இனவாதிகளின் வாக்குகளை அறுவடை செய்யக்காத்திருந்த ஜே.வி.பி.க்குப் போட்டியாக இப்பௌத்த பிக்குகள் இருந்தமையாகும். தேர்தல் முடிவுகளும் அதனைச் சரியென்றே காட்டுகின்றன. ஏனெனில கடந்த தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் கிடைத்த வாக்குகள் 50வீதத்துக்கு சற்று அதிகமாகும். இந்த வாக்குகள் தமக்கு கிடைக்கும், ஒரு உறுதியான அரசொன்றை அமைக்க முடியுமென்றே இரு

இதேவேளை பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றபின் பாராளுமன் றத்தில் சம்பிரதாயத்தை மீறி சில சலுகைகளைக் கோருகின்றனர். சிங்கள மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி குறித்து பேச பாராளு மன்றம் வந்த பௌத்த பிக்குகள் சபாநாயகர் பதவி, சபாநாயகருக்கு மரியாதை செலுத்து வதிலிருந்து விலக்கு ஆசனத்தில் வெண்பட் டுத்துணி விரிப்பு என்பவற்றைக் கோருகின்றார்கள்.

மூன்றாவது சக்தியாக உருவெடுத்துள்ளவர்களுக்கு இவை வழங்கப்படக்கூடும் ஆனால் அத்துடன் பிரச்சினை முடிந்துவிடாது. அரசாங்கம் இப்பொழுது எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளுக்கு இவர்கள் முட்டுக்கட்டையாக இருக்கப்போகின்றனர் என்பது உண்மையாகும். குறிப்பாக இனப் பிரச்சினைத் தீர்வு மேற்குலக நாடுகளுக்குடனான உறவு, பொருளாதாரக் கொள்கைகள் போன்ற விடயங்களில் ஐ.ம.சு.மு. அரசாங்கம் ஜே.வி.பி.யிடமிருந்து மட்டுமல்ல இவர்களிடமிருந்தும் பல முட்டுக்கட்டைகளைச் சந்திக்கவே போகின்றது.

**வேலவன்**

---

# யாழ். இல் ஏற்றுமதி வசதிகொண்ட கடலுணவுச் சந்தையை நிறுவ நிதிஒதுக்கீடு

## -உலக உணவுஸ்தாபனம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நவீன ஏற்றுமதி வசதிகள் கொண்ட சர்வதேச தரத்திலான கடலுணவுச்சந்தை ஒன்றை நிறுவுவதற்காக உலக உணவுஸ்தாபனம் 10 மில்லியன் ரூபாக்களை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ்.மாவட்ட மீனவர்கள் தாம் பிடிக்கும் கடலுணவுகளைச் சந்தைப் படுத்தி உரிய லாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது பாதிக்கப்படுவதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சங்கச் சம்மேளனம் பல நிதி நிறுவனங்களிடமும் சுட்டிக்காட்டி உரிய வசதிகளை ஏற்படுத்தித்தருமாறும் கோரிக்கையை விடுத்திருந்தது.

இதற்கமைவாக சிறந்த சந்தைப் படுத்தல் வசதிகளைக் கொண்ட கடலுணவு சந்தையை நிறுவுவதற்கு முதற்கட்ட நிதியாக 10 மில்லியன் ரூபாவும் உலக உணவுஸ் தாபனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனைப்பயன்படுத்தி இச்சந்தை ஒன்றை நிறுவுவதற்கான இடத்தினைத் தெரிவு செய்யும் முயற்சிகளில் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் சங்கச் சம்மேளனம் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. (35)

# மல்லாவி மருத்துவமனையில் மருந்துக்குத் தட்டுப்பாடு

மல்லாவி மருத்துவமனையில் காலாண்டு மருந்துகள் அனுப்பப்படாததால் மருந்து தட்டுப்பாடு நிலவி வருகின்றது விசர்நாய்க் கடியாலும், பாம்பு கடியினாலும் வருவோர் தொகை அதிகரித்து வருவதால் இதற்கான மருந்துக்கள் இன்றி மேலதிக சிகிச்சைக்காக வெளி மாவட்ட வைத்திய சாலைகளுக்கு நோயாளர்களை அனுப்பி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. என வைத்தியசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.அத்துடன் நோயாளர்கள் பலத்த சிரமத்தையும் எதிர்நோக்கியுள்ளதாக விசனம் தெரிவித்தனர். (24)

# துறைமுகத்திலிருந்து கடத்த முயன்ற சப்பாத்துக்கொள்கலன் பிடிபட்டது

சீனாவிலிருந்து இறக்குமதி செயயப்பட்டு கொழும்பு துறை முகத்திலிருந்து கடத்திச்செல்ல முற்பட்ட சப்பாத்து கொள்கலன் ஒன்றை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

வியாழக்கிழமை இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது வர்த்தகர் ஒருவரும் கப்பல் முகவர் பிரதிநிதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு மோசடி செய்யப்பட்டு கடத்திச்செல்ல முற்பட்ட கொள்கலன் ஒன்றே மடக்கிப் பிடிக்கப்பட்டதாக உதவி சுங்க அத்தியட்சகர் கூறியுள்ளார்.

2 ஆயிரம் சோடி சப்பாத்துக்கள் இறக்குமதி செய்ய அனுமதி பெறப்பட்டு சுங்கத்தீர்வையாக 3 லட்சம் ரூபா செலுத்தப்பட்டிருந்த கொள்கலனில் 12 ஆயிரம் சப்பாத்து சோடிகள் நிரப்பப்பட்டு 20 லட்சம் ரூபா சுங்கத்தீர்வை செலுத்தப்படாமல் மோசடி செய்யப்பட்டு துறைமுகத்திலிருந்து வெளியில் கடத்திச் செல்ல முற்பட்ட வேளையில் துறைமுக வாசலில் வைத்து இந்தக் கொள்கலன் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

## உயர்தர மாணவருக்கான முன்னோடி கருத்தரங்கு

2004 உயர்தரப்பரீட்சையில் தோற்றவுள்ள கணித உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவர்களிற்கு வடக்கு கிழக்கில் உள்ள முன்னோடி ஆசிரிய வள அணியினரால் மேற்கொள்ளப்படும் செயலமர்வு 18 ஆம் திகதி தொடக்கம் முடிப்புக்குடியிருப்பு மகவித்தியாலயத்தில் நடைபெறுகின்றது. முல்லை மாவட்டத்தை சேர்ந்த பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் இதில் கலந்து கொண்டு பயன் அடையுமாறு முடிப்புக்குடியிருப்பு பழைய மாணவர் சங்கத்தினர் வேண்டுகின்றனர். (26)

# இடைக்கால நிர்வாக திட்டவரைபின் அடிப்படையில் சமாதான பேச்சுக்கள் விரைவில் தொடரப்படவேண்டும்

## கனேடிய பிரதிநிதிகளிடம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**இடைக்கால நிர்வாக சபைத்திட்டவரைபின் அடிப்படையில் சமாதானப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் சர்வதேசத்திற்கு உணர்த்தியுள்ளனர் என யாழ். வருகை தந்த கனேடிய பிரதிநிதிகளிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

தமிழ் மக்கள் தமது ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை திட்டவரைபு அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் தொடரப்படவேண்டும் என்பதையே எதிர்பார்த்து நிற்கின்றார்கள். இதனை நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தல் ஊடாகவும் அவர்கள் சர்வதேச சமூகத்திற்கு உணர்த்தியுள்ளனர்.

இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கனேடியப் பிரதிநிதிகளிடத்தே இலங்கைத் தமிரசுக்கட்சியின் தலைவரும் யாழ் பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தருமான சி.க. சிற்றம்பலம் விளக்கமளித்துள்ளார்.

தேர்தலின் பின் யாழ் குடாநாட்டு நிலவரங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் விஜயம் செய்த இலங்கைக்கான கனேடிய தூதரகத்தின் இராஜாங்க அதிகாரி கிறிஸ்ரி தலைமையிலான குழுவினரை யாழ் நகரில் உள்ள ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன விருந்தினர் விடுதியில் வைத்துச் சந்தித்த போதே அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

தொடர்ந்தும் விளக்கமளித்த அவர் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக தனிநாடு கோரிப்போராடி வந்த புலிகள் சமஷ்டி அடிப்படையில் சுயநிர்ணய உரிமைகளை பெற்று தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு முன் வந்துள்ளனர். இதனால் அவர்கள் பல விட்டுக் கொடுப்புக்களையும் செய்து வருகின்றனர்.

இந்த வாய்ப்பை சரிவரப்பயன்படுத்தி இலங்கைத்தீவில் இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண புதிய அரசாங்கம் தவறுமேயானால் அதனைத்தொடர்ந்து அரசிற்கு ஏற்படும் நிதிநெருக்கடிகளை தீர்ப்பதற்காக சர்வதேச சமுகத்தினர் முன்வரக்கூடாது. அத்துடன் சிறிலங்கா அரசிற்கு வழங்கும் நிதிஉதவிகளையும் உடனடியாகவே நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (33)

# அரசியலமைப்பை மாற்றும் ஐ.ம.சு.மு. அரசின் நடவடிக்கையை நாம் ஒருபோதும் ஆதரியோம்

## ஜாதிகஹெல உறுமயவின் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி அரசினால் முன்வைக்கப்படவிருக்கும் திடீர் அரசியல் அமைப்புமாற்று நடவடிக்கைகளுக்கு ஜாதிகஹெல உறுமய கட்சி ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டாது என கட்சியின் ஊடகப் பேச்சாளர் அதுரலிய ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

லங்காதீப வாரஇதழுக்கு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் கூறியிருப்பதாவது இந்தக் கூட்டுஅரசினால் அரசியலமைப்பு மாற்றம் செய்யப்படுவது நாட்டின் நலன்கருதியன்று தனிப்பட்டவர்களின் நலன் கருதியே என்று தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் அமைப்பின் படி நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மையை பெற தவறிவிட்டது எனவும் அவர்களுக்கு 45 வீத மக்கள் ஆதரவு மட்டுமே கிடைத்துள்ளது எனவும் தொகுதியடிப்படையில் தனக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்திருப்பதாக அக்கட்சி குறிப்பிடுவதை ஏற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பு முறை பற்றித மக்குத் தெரியாது எனக்கூறிய அவர் விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால சபைமுறையை அனுமதிக்குமாறு அது அமைந்ததால் அதனை தான் ஆதரிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். எனினும் இந்த அரசமைப்பு மாற்றம் செய்யும் நடவடிக்கை தொடர்பாக வெளியிடப்படும் கருத்துக்களை ஆழமாக ஆராய்ந்து பார்க்குமுன்பு இறுதியான முடிவுக்கு வரமுடியாது என அதுரலியரதன தேரர் கூறியுள்ளார்.

# கருவெலகஸ்வெல பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவர் விளக்கமறியலில்

### - கொள்ளைச்சம்பவம் தொடர்பாக-

(கொழும்பு)

கொள்ளைச் சம்பவம் ஒன்றில் நேரடியாக தொடர்புபட்டதாகக் கூறப்படும் கருவெலகஸ்வெல பிரதேச சபையின் எதிர்க்கட்சித்தலைவரை எதிர் வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நேற்று மன்னாரில் இருந்து காலை 1.40 மணியளவில் கொழும்பை நோக்கிச் சென்ற வாகனத்தை மறித்து குறிப்பிட்ட பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும் மாவட்ட குழுவினரும் கொள்ளையிட முயற்சித்தார்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவரும் அந்தக் குழுவினரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு புத்தளம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை புத்தள நீதவான் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# மாணவரிடையே திருக்குறள் தமிழ் இலக்கிய திறன் போட்டி

(அலுலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பள்ளி மாணவர்களுக்கிடையில் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் போட்டி-2004 நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் மாணவர் தவிர்ந்த ஏனையோர்களுக்கான எழுத்துத்தேர்வுப் போட்டியும் நாவன்மைப் போட்டியும், நடைபெறவுள்ளதுடன் இப்போட்டியில் இரு பாலரும் பங்கு பற்றலாமெனவும், "மாணவர் வாழ்வில் திருக்குறள்" எனும் நூலில் போட்டிகளுக்கான சகல அம்சங்களும் அடங்கியுள்ளதெனவும் வேண்டுகைகளை எதிர்வரும் 10.05.2004 ற்கு முன்பதாக தமிழ்ச் சங்கசெயலர் கிளி நொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு தமிழ்ச் சங்கச் செயலர் வேண்டியுள்ளார். (சோ)

### ஒழுக்காற்று நடவடிக்கை

முன்னாள் வெளிவிறவு அமைச்சா டிரோஸ் பெர்னாண்டோ மீது ஐக்கிய தேசியக்கட்சி ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

ஐ.தே.கட்சியின் மீதும் அதன் தலைமைத்துவத்தின் மீதும் இவர் தெரிவித்து வருகின்ற விமர்சனங்களே இதற்கான காரண மென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டாக்காலி நாய்களின் பாதிப்பிலிருந்து காக்க பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்க கோரல்!

(அலுவலகசெய்தியாளர்)

கட்டாக்காலி நாய்களினை அழிக்கும் நடவடிக்கையினை தமிழீழ சுகாதார சேவையினர் இம்மாத இறுதிப் பகுதியில் தீவிரமாக மேற்கொள்ளவுள்ளமையின் காரணமாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கீழ்வரும் துண்டுப் பிரசுரத்தினை விநியோகித்து வருகின்றனர்.

உங்கள் வளர்ப்பு நாயை கட்டியோ அடைத்துவைத்தோ வளர்க்கவும். அண்மையில் உள்ள மிருகவைத்தியப் பகுதியில் காட்டி தடுப்பூசி போடவும், ஆறு வாரத்திற்கு மேற்பட்ட நாய்க்கு வருடத்திற்கு ஒரு முறை தடுப்பூசி ஏற்றுங்கள். உங்கள் வளர்ப்பு நாயை பிரதேசசபையில் பதிவு செய்துதரும் அடையாளத்தகட்டை கழுத்துப்பட்டியுடன் சேர்த்து கட்டுங்கள். கட்டாக்காலியாகத் திரியும் நாய் அடையாளமானது கழுத்துப்பட்டி அணியாது திரியும் நாய்கள் கட்டாக்காலி நாய்களாக கருதப்பட்டு எங்கு நின்றாலும் அழிக்கப்படும். கட்டாக்காலி நாய்களை அழிக்க அனைவருடைய ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது. விசர்நாய் கடியினால் ஏற்படும் அநியாய மனித உயிர் இழப்புக்களை தவிர்ப்போம்.

*நாய் கடித்தால் நீங்கள் செய்ய வேண்டியவை.*

காயமேற்பட்ட இடத்தை சவர்க்காரமிட்டு நன்றாகக் கழுவ வேண்டும், உடனடியாக மருத்துவரை நாடி அவரின் ஆலோசனைப்படி செயற்படவும்.

*யாருக்கு தடுப்பூசி போட வேண்டும்..??*

1. வளர்ப்பு நாய் கடித்தால் அதை கட்டி வைத்து அவதானிக்கவும். இரு வாரங்களுக்குள் நாய் தானாகவே இறந்தால் அது நிச்சயமாக விசர் நாயாகவே இருக்கும்.
2. கடித்து இருவாரங்களுக்குள் அந்நாயை அடித்துக்கொன்றாலும் அல்லது அந்நாய் காணாமல் போனாலும்
3. தெருநாய் அல்லது கட்டாக்காலி நாய் கடித்தால் அதை இனம் காண முடியாது.(அது விசர் நாயாக இருக்கும் வாய்ப்பு அதிகம்)

இம் மூவகையும் தடுப்பூசி போடப்பட வேண்டியவர்கள்.

*எவ்வாறு தடுப்பூசி போட வேண்டும்..??*

மருத்துவரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட நாட்களில் தவறாமல் ஊசி போடவேண்டும்.

ஊசி போடாதவர்களுக்கு மட்டுமன்றி அரைகுறையாக ஊசிபோட்டவர்களுக்கும் நோய் ஏற்படும்.

*விசர் நாய்க்கடி நோய் (றேபீஸ்) ஏற்பட்டால் சிகிச்சை பயனளிக்காது. மரணம் நிச்சயம்* என மேலும் கூறப்பட்டுள்ளது. (சோ)

## மேஜர் யாழிசையின் நீங்காத நினைவுடன்

## அவள் மலர்ந்த இன் நாளில் நிமிர்கின்றோம்

தாயின் மடியில் 20 • 04 • 1972



தாயகமண்ணில் 26 • 06 • 1999

# மேஜர் யாழிசை

தாய்நிலத்தின் துயர்துடைக்க தடம்பதித்தாய்
தானைத் தலைவன் வழிநிமிர்ந்து நீ நடந்தாய்
தளராத துணிவோடு களமாடினாய்
வீத்துடலாய் நீ வீழ்கையிலே உடல் தாங்கினோம்
நீ முந்திப் போனதினால் உயிர் வாடினோம் — உன்
இலட்சியம் வெல்லும்வரை நாம் நடப்போம்.

உன்பிறந்த நாள் நினைவுடன்
குடும்பத்தினருடன்
போராளித் தோழிகள்

(4443)

## 6ம் ஆண்டு நீங்காத நினைவில்



தாய் மண்ணில் முத்தாக 14-07-1974

தாய் மண்ணில் வித்தாக 20-04-1998

சம்பவம்:- மாங்குளம் ஒலுமடு நோக்கி முன்னேறிய இராணுவத்துடனான மோதலின் போது...

# மேஜர் துஸ்யந்தன்/துவாரதன்

## (இரத்தினசிங்கம் யோகநாதன் (வவா)

6ஆம் வட்டாரம், குமுழமுனை,முள்ளியவளை

**20-04-2004**

விடுதலைக் கனவை நெஞ்சினில் சுமந்து
வீரத் தலைவன் அணி புகுந்த மகனே
வடுச்சுமந்த வாழ்வை மாற்ற வரிப்புலியாகி
களரகம் குரல் கொண்டு களம் மீட்டாய் - வீரனே
உன்விழி சென்ற இடமெல்லாம் பகைவன் விதி மாறியது
வீரத்தோடு சமராடி சுவர்க்கம் நீ கண்டாய் - நாம்
விழி சொரிய மலர் தூவி நெஞ்சில் உன் நினைவைச் சுமக்கின்றோம்.

6ஆம் வட்டாரம்,
குமுழமுனை.

நீங்காத நினைவுகளுடன்
அப்பா, அம்மா, அண்ணா,
அக்கா, அத்தான், (சுவிஸ்)
அண்ணி, மருமகன்

(-7188)



சிந்தனைக்கு

விழிப்புத்தான் விடுதலைக்கு முதற்படி.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 20-04-2004

## விரைவில் மற்றைய விரல்களுக்கும்!

எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள வடமேல் மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு இம்முறை மோதிரவிரலில் மைபூசப்படும் என தேர்தல் ஆணையகம் விடுத்துள்ள அறிவிப்பானது வடமேல் மாகாணசபைத் தேர்தலின்போது மோசடிகள், அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுப்பதற்கானதொரு செயற்பாடாக இருக்கலாம். ஆனால் சிறிலங்காவின் இன்றைய அரசியற் சூழ்நிலையில் இவ் இரண்டு விரல்களில் மட்டும் மை பூசுவதுடன் மட்டும் இது முடியுமா? அன்றி மேலும் விரல்களுக்கு மை பூச வேண்டிவருமா? என்பதே கேள்வியாகவுள்ளது.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் ஐ.ம.சு.முன்னணி (சுதந்திரக்கட்சி–ஜே.வி.பி.கூட்டு) அறுதிப்பெரும்பான்மையைப் பெறத்தவறியமையானது சிறிலங்காவில் புதிய அரசாங்கம் எவ்வளவு காலத்திற்குத் தாக்குப்பிடிக்கும் என்ற கேள்வியை எழவைத்துள்ளது. மக்கள் ஆட்சியமைக்கத் தங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர் என ஐ.ம.சு. முன்னணியினர் கூறிக்கொண்டாலும் அக்கூட்டணிக்கு பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை இல்லை.

இதே சமயம் இவ் ஐ.ம.சு.முன்னணியுடன் இணைந்து அரசாங்கம் அமைப்பதற்கு ஏனைய சிறியகட்சிகளும் தயாராக இல்லை. அரசாங்கத்திற்கு வெளியில் இருந்தே ஆதரவு கொடுக்கப்படும் என்பதே சில கட்சிகளின் நிலைப்பாடாகும். இதுவரையிலான நிலவரப்படி அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாகவே இருப்பதற்கான வாய்ப்புக்களே நிரம்ப உண்டு.

அரசாங்கத்திற்கு வெளியில் இருந்து ஆதரவு அளிப்பதென்பது பொதுவில் அரசாங்கத்தை அச்சுறுத்தும் ஒரு நடவடிக்கையாகவே கொள்ளத்தக்கது. அதாவது அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்விற்கும் எதிர்த்தரப்பில் இருக்கும் சிறிய கட்சிகளின் ஆதரவு கிடைக்கப் பெறுமா? என்பதை ஆலோசித்தே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியதாக இருக்கும். சிறியகட்சியினையோ தீவிரவாத போக்குடைய கட்சிகளையோ திருப்திப்படுத்தாத எந்தவொரு நடவடிக்கையுமே அரசாங்கத்திற்கு ஆபத்தானதாகி விடமுடியும்.

தற்போதைய சூழ்நிலையில் 22ஆம் திகதி பாராளுமன்றம் கூடும்போது சபாநாயகரைத் தெரிவு செய்வதே கடும்போட்டிக்கு உரியதொரு விடயமாகியுள்ளது. போட்டிக்கு ஐ.தே.கட்சியும் வேட்பாளரை நிறுத்துவதெனத் தீர்மானம் செய்துள்ள நிலையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அற்ற நிலையில் உள்ள ஐ.ம.சு.முன்னணியினால் தமது கூட்டணியில் இருந்து ஒருவரைச் சபாநாயகராகத் தெரிவு செய்வதென்பது அதற்கு சவால் நிறைந்த ஒன்றாகியுள்ளது. இதற்கென ஜாதிக ஹெல உறுமயவின் உதவியை ஐ.ம.சு.மு. நாடினும் அங்கிருந்து திருப்திகரமான பதில் கிடைக்கப் பெற்றதாக இல்லை.

ஏனெனில் ஐ.ம.சு.முன்னணியின் வேட்பாளரைவிட ஐ.தே.கட்சி வேட்பாளர் சிங்கள-பௌத்தர்களுக்கான அடையாளங்களை நிரம்பவே கொண்டவராக உள்ளமையே அதற்குக் காரணமாகும். ஆகையினால் புதிய அரசாங்கம் இனி ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவை நாடிச்செல்லும் ஒவ்வொரு வேளைகளிலும் பௌத்த–சிங்கள அடையாளங்கள் உயர்ந்தளவில் வெளிப்படுத்தல் என்பது அவசியமானதாகின்றது.

இது ஒருபுறம் இருக்க ஆளும் கூட்டணியான ஐ.ம.வி.முன்னணியினருக்குள் காணப்படும் முரண்பாடு காரணமாக இன்னமும் ஜே.வி.பி.தனது அமைச்சுப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. இது தொடர்பாக பல தடவைகள் இருதரப்பும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்திய போதும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வரமுடியவில்லை.

இவ்வாறு கூட்டணிக்குள் முரண்பாடு ஏற்பட்டுள்ளமைக்குத் தனியாக அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிப்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மட்டும்தான் காரணமா? அன்றி தனிநபர்கள் மீதான விருப்பு வெறுப்புக்களும் அதன் பின்னணியில் உண்டா? என்பதும் கேள்விக்குரியதே. அதாவது மகிந்தராஜபக்ச பிரதமரானதை விரும்பாத ஜே.வி.பி அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பான நெருக்கடியில் தீவிரம் காட்டுகின்றதா? என்ற கேள்வியைச் சூழ்நிலை எழ வைக்கிறது.

இந்த நிலையில் புதிய அரசாங்கம் எவ்வளவு காலம் நீடிக்கும் எப்பொழுது கவிழும் என்பதை எதிர்வு கூறுவது கடினமானதொன்றாகவே இருக்கும். ஆயினும் வாக்களிப்பின் போது பூசப்படும் மை முற்றாகக் கைவிரலில் இருந்து அழியும் முன்பாகவே இவ் அரசாங்கம் கவிழ்வதற்கான வாய்ப்பு நிரம்பவே உள்ளது. ஆகையினால் அடுத்த தேர்தலில் எந்த விரலில் மைபூசுவது என்பது பற்றித் தேர்தல் ஆணையாளர் சிந்திக்க வேண்டியதாகவே இருக்கும்.

அவ்வாறு எதுவும் நிகழாமல் ஐ.ம.சு.முன்னணியின் ஆட்சிதான் நீடிப்பதாக இருப்பினும் கூட புதிய அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையாகக் கொள்ளப்படும் சனாதிபதி சந்திரிகாவைப் பிரதம மந்திரியாக்கும் நடவடிக்கைக்கென கருத்துக்கணிப்பு மேற்கொள்ளும் திட்டம் அரசாங்கத்திற்கு இருப்பதினால் மக்கள் கைகளில் மீண்டும் மைபூச வேண்டியதேவை தேர்தல் ஆணையகத்திற்கு ஏற்படக்கூடும். ஆகையினால் மற்றொரு விரல் தெரிவு செய்வது தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் நான்கு வருடத்திற்குள் மூன்று பொதுத்தேர்தலை நடத்தி சாதனை படைத்துள்ளனர். தற்போதைய சூழ்நிலையில் அடுத்ததொரு தேர்தலையும் விரைவில் எதிர்பார்ப்பதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. இதேவேளை சிங்கள வாக்காளர்கள் கடந்த காலத்தைப் போல் அல்லாது இரண்டு பிரதான ஆட்சிகளுக்கு அப்பால் தமது தெரிவில் ஆர்வம் காட்டியுள்ளமை சிறிலங்காவின் அரசியல் ஸ்திரமின்மையையும் அடிக்கடி தேர்தலையும் தொடர்கதையாக்குவதாகவே இருக்கும்.

# முன்னாள் அமைச்சர்களுக்கெதிரான மோசடி குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய முடிவு

(கொழும்பு)

கடந்த தேர்தலின் போது ஐ.தே. முன்னணி அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக கூறப்பட்ட ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய ஆணைக்குழுதீர்மானித்துள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பான ஆரம்ப வாக்குமூலங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. ஐ.ம.சு முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினர்கள் முன்னர் அரசாங்கத்தின் 15 அமைச்சர்களுக்கும் 03 அதிகாரிகளுக்கும் எதிராக முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக விரிவான விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆணைக்குழு மேலும் தெரிவிக்கிறது.

# பொதுத் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு அறிவிப்பு

(கொழும்பு)

13ஆவது பொதுத்தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரசாங்க ஊழியர்களுக்கான கொடுப்பனவுத் தொகைகள் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான கடிதம் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் (மத்திய வங்கி ஆளுநர்) கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள் ஆகியவற்றின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வாக்களிப்பு நிலையத்தில் கடமை புரிந்த அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு விபரம்:- வலய உதவி தெரிவத்தாட்சி அதிகாரி 1200ரூபா, சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர் 1200ரூபா, கனிஷ்ட தலைமை உத்தியோகத்தர், எழுதுநர் 600ரூபா, சிற்றூழியர் 500 ரூபா வழங்கப்படும்.

வாக்குப்பெட்டி, வாக்குச்சீட்டு விநியோகிக்கும் கடமை, அவற்றை தேர்தல் முடிந்தபின் மீளப்பெறும் கடமை புரிந்த உதவி தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் நாளொன்றிற்கு 400ரூபா, சிரேஷ்ட உத்தியோகத்தர், கனிஷ்ட உத்தியோகத்தர் நாள் ஒன்றிற்கு 200ரூபா பெறுவர்.

பிரதமவாக்குக் கணக்கெடுப்பு உத்தியோகத்தர் 3000ரூபா, வாக்கு எண்ணுதல், வெளியிடுதலில் ஈடுபட்ட உதவி தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் 1500ரூபா, சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர் 1000ரூபா, கனிஷ்ட உத்தியோகத்தர், எழுதுநர் 900ரூபா, சிற்றூழியர் 600ரூபா வழங்கப்படும்.

மேற்படி வாக்களிப்பு நிலைய கடமைவாக்குப்பெட்டி வாக்குச்சீட்டு பெறும் கடமை வலய கடமை ஆகிய கடமைகளுக்கான கொடுப்பனவுகளில ஒரு கடமைக்கான கொடுப்பனவு மட்டுமே வழங்கப்படும். வாக்கு எண்ணும் கடமை பெறுபேறுகளை வெளியிடும் கடமை நீங்கலாக ஏனைய கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கு மேற்படி கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

இதேவேளை அரச ஊழியர் அல்லாதவர்களுக்கு நாளொன்றிற்கு 150ரூபாவும் சொந்த வாகனங்களைப் பாவித்த அரச ஊழியருக்கு மைலுக்கு 10ரூபாவும் வழங்கப்படும்.

அத்துடன் தாபன கோவை விதிக்கமைய அனைவருக்கும் பிரயாணச் செலவு வழங்கப்படும்.

# அமைச்சு பதவி இழுபறி தொடர்வதால் மகாவலி அமைச்சு சனாதிபதி வசமாகும்

## - சிங்கள நாளிதழ் ஆருடம்

ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி அரசின் அமைச்சுப் பதவி இழுபறி நிலைக்கு ஒரு தீர்வாக சனாதிபதி மகாவலி அமைச்சை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க உத்தேசித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த அமைச்சை ஜே.வி.பி.யினருக்கு வழங்கக் [illegible] என்ற பிடியில் சிறில சு.க.வினர் உறுதியாக நிற்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் கூறப்படுகிறது. அதன்படி சனாதிபதி மகாவலி அமைச்சை தமது பிடியில் வைத்துக்கொண்டு வேறு ஒரு அமைச்சை ஜே.வி.பி.யினருக்கு வழங்க உத்தேசித்திருப்பதாக அச் செய்தி கூறுகிறது.

இந் நிலையில் தமக்கு வழங்கப்பட்ட ஏனைய அமைச்சுப் பதவிகளில் சத்தியப்பிரமாணம் எடுப்பதை ஜே.வி.பி. தாமதப்படுத்துவதாகவும் எனினும் வரும் 22ஆம் திகதிக்கு முன்பு இப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு பேச்சுக்கள் நடைபெறும் எனவும் திவயின சிங்கள நாளிதழ் கூறுகின்றது.

# ஹெலஉறுமய கட்சியினருக்கு இந்தியா உதவி வழங்க உறுதி

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயவிற்கு அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

ஹெல உறுமய மேற்கொள்கின்ற நடவடிக்கைகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக இருப்பதாக உறுதியளிக்கப்பட்டது.

எல்லாவெல மேதானந்த தேரர் தலைமையிலான பௌத்ததேரர் குழுவிற்கும் கொழும்பிலுள்ள இந்திய தூதுவர் நிருபம் சென்னுக்குமிடையிலே நடைபெற்ற சந்திப்பின் போது இவ் உறுதி மொழி [illegible]ங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்த[illegible]

## யானைகளை விற்கத்தடை

(கொழும்பு)

பின்னவல யானைகள் சரணாலயம் மேலும் பல வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் இங்குள்ள யானைகள் வெளியாருக்கு விற்பனை செய்யப்படுவதும் தடை செய்யப்படவுள்ளது. இவ்வாறு சுற்றாடல், இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி கூறியுள்ளார்.

## அரச வாகனங்களை மீட்க ஆயத்தம்!

(கொழும்பு)

கடந்த அரசகாலத்தில் அரச பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான 27 வாகனங்கள் மீண்டும் கையளிக்கப்படாமல் உள்ளது பற்றி விசாரணை நடத்த உளவுப்பிரிவினர் ஆயத்தமாய் உள்ளனர். விசாரணை செய்து இவை மீட்டெடுக்கப்படுமென துறைமுக அதிகார சபை அதிகாரி பத்திரிகை ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டுத்துறை அமைச்சை தருவதாக உறுதியளித்ததாலேயே அரசியலுக்கு வந்தேன்

## - அர்ஜூனா ரணதுங்க கூறுகிறார்

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சுப் பொறுப்பை தன்னிடம் வழங்குவதாக சந்திரிகா உறுதியளித்ததாலேயே தான் அரசியலில் பிரவேசித்ததாக ஐ.ம.சு.மு.எம்.பி.யான அர்ஜூனா ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தான் பதவிக்கு ஆசைப்பட்டு அரசியலுக்கு வரவில்லை எனவும் அப்படி ஆசைப்பட்டிருப்பின் கிடைத்த பிரதியமைச்சர் பதவியை ஏற்றிருக்கலாம் எனவும் தெரிவித்ததுடன் கொள்கையுடன் கூடிய அரசியலையே விரும்புவதாகவும் அனுபவப்பட்ட விளையாட்டு வீரன் என்ற வகையில் தான் இந்த விளையாட்டுத்துறை யை மேலும் முன்னேற்றும் நோக்கில் அத்துறையை தமக்கு வழங்குமாறு கோரியதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் விளையாட்டுத்துறையில் ஏற்பட்ட மோசடிகளையும் ஊழல்களையும் கண்டு மக்கள் தம்மிடம் புகாரிட்டதால் அதனை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க நினைத்த நிலையில் வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டது. அவருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பெண்கள் ஆசியக் கிண்ண கிரிக்கெட்; முதல் போட்டியில் இந்திய அணிக்கு வெற்றி

கொழும்பில் நடைபெறும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதலாவது ஒருநாள் போட்டியில் இந்திய மகளிர் அணி சிறிலங்கா மகளிர் அணியை 123 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியை வென்ற சிறிலங்கா அணி இந்திய அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதன் படி முதலில் ஆடிய இந்திய மகளிர் அணி 45 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 217 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் அஞ்சு ஜேன் 90 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு 218 ஓட்ட இலக்கை நோக்கி ஆடிய சிறிலங்கா மகளிர் அணி 45 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தது.



கிளிநொச்சி நகரில் அன்னை பூபதியின் நினைவாக நடைபெற்ற உண்ணாவிரத நிகழ்வு

# புலிகளின் உள்விவகாரத்தை சனாதிபதி தேவையற்ற விதத்தில் கையாண்டுள்ளார்

## ஐ.தே.க. பா.உ. மனோ விஜயரட்ண

விடுதலைப்புலிகளின் உள் விவகாரத்தை சனாதிபதி தேவை யற்ற விதத்தில் கையாண்ட மையால்,அரசியலில் குழப்ப நிலை ஏற்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. ஐக்கியதேசியக் கட்சி யின் கேகாலை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் மனோவிஜய ரட்ண இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் ஜே.வி.பி .யுடன் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க முடிந்திருக்கும் சனாதிபதி அது தொடர்பில், கருணா வையும் தமக்கு சாதகமாக பயன் படுத்த முயற்சித்தார். இதன் அடிப் படையிலேயே, அவர் படையினரை இந்த விடயத்தில் தலையிடச் செய்தார்

இது இன்று பாரிய அரசி யல் முறுகலுக்கு வித்திட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள மனோ விஜயரட்ண தமிழீழ விடுதலைப்புலிகளின் உள்ள கப்பிரச்சினையில் சனாதிபதி தலை யிட்டு அரசியல் லாபம் தேட முனைந்த போதும் அதில் தோல்வி கண் டுள் ளதாக தெரிவித்துள்ளார். (32)

# நிதி உதவி தொடர்பாக புதிய அரசுடன் பேச்சு நடத்த சிறப்புக் கூட்டம்

## உதவி வழங்கும் நாடுகள் கூட்டுகின்றன

சிறிலங்காவில் பதவி ஏற்றுள்ள புதிய அரசுடன் நிதி உதவி தொடர் பான பேச்சுவாத்தையை நடத்துவதற்கு உதவி வழங்கும் நாடுகள் எதிர் வரும் மேமாதம் 17ஆம் திகதி சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டவுள் ளன.பெல்ஜியத்தில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் இலங்கைக்கு தொடாந்தும் உதவி வழங்குவது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. ஐக்கிய தேசிய முன்னணிக்கும், தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் தற் போதைய நிலைமை தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் புதிய அரசுடன் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மேற்கொள்ளவுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடு களின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை வரவுள்ளதாகவும், புதிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற் கொள்வர் எனவும் தெரியவருகிறது.

# சமுர்த்தி உத்தியோகத்தர் கொலை ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர் கைது

(வடமராட்சி)

கடந்த ஆண்டு மே மாதம் 2ம் திகதியன்று ஊர்காவற்றுறை பகுதி யில் பெண்ஒருவர் கோரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் ஈ.பி.டி.பி அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலி சாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை வரும் மே மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதவான் அ.பிறேம் சங்கர் பொலிசாருக்கு கடந்த சனி யன்று உத்தர விட்டுள்ளார்.இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் கடந்த ஆண்டின் மே மாதம் 2ம் திகதியன்று ஊர்காவற்றுறைப்பகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தரான திருமதி. தி.ஜெகத்ஜென்னி (வயது 24) என்பவர் கோரமாக கொலை செய்யப்பட்டிருந்தார். இக் கொலைச்சம்பவம் தொடர்பாக ஈபிடிபி. அமைப்பின் முக்கியஸ்தரும் முன்னாள் காங்கேசன் துறைப் பகுதி அமைப்பாளருமான வேலு எனப்படும் திருஞானம் சிவ குமார் பொலி சாரால் தேடப்பட்டு வந் தார் இந்நிலையில் கடந்த ஒரு வருட காலமாக தேடப்பட்டு வந்த நபர் யாழ்.நகரப்பகுதியில் நடமாடுவதாக கிடைத்த தக வலை யடுத்து இவர் கைதானார். (27)

# பாரிய இரு கிளைமோர் குண்டுகள் கொழும்பில் பொலிசாரால் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டிராத பாரிய கிளைமோர் குண்டுகள் இரண்டு மீட்கப்பட்டுள்ளன. பன்னிப்பிட்டிய தெப்பானம என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப் படையில்,இவை இரண்டும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு கூறுகிறது. மீட்கப்பட்ட ஒரு கிளைமோரின் நிறை ஆறுகிலோ என அறிவிக்கப் பட்டுள்ளது. இது பெரும் நாசத்தை ஏற்படுத்தக்கூடிய குண்டு என தெரிவிக் கப்படுகிறது. (32)

### நாகப்..

இதுவிடயமாக குறித்த அம்மீன வர்கள் தங்களது உறவினர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இவர்களைக்கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை பெற்றோர் செய்து வரு கின்றனர்.இ.கமலேஸ்வரன் (வயது-33), மை. அன்ரனிதாஸ் (வயது-13) ஆகிய இருவருமே தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். (20)

### கொடிகாமத்தில்..

குமார்(வயது-28) என்பவர் பலியான வராவார். அத்துடன் இவ்விபத்தில் சிக்கி வடமராட்சி மற்றும் தென்ம ராட்சி பகுதி வாசிகள் 9 பேர் படு காயமடைந்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வரு வதாவது, கொடிகாமம் பகுதியில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பேருந்து ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து குடை சாய்ந்து இவ்விபத்து இடம்பெற்றி ருப்பதாகத் தெரிகிறது. காயம டைந்தவர்கள் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். (33,27)

### மகாவலித்..

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத் திய குழு ஏற்கனவே தீர்மானித்துள் ளது தற்சமயம் ஜே.வி.பி.க்கு பிரதி அமைச்சுக்களையும் சேர்த்து 8.அமைச்சுக்கள் கொடுக்கப்பட்டுள் ளன. மகாவலித்துறையையும் அவர் களுக்கு கொடுத்தால் ஜே.வி.பி.க்கு 9 அமைச்சுக்களைக் கொடுத்ததாக ஆகிவிடும் என்பதே சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடாகும். இந்நிலையில் இந்தப்பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவர பிரதம மந்திரி மகிந்தராஜபக்ஷவும் அமைச் சர் மங்களசமரவீரவும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றனர். (32)

### அமெரிக்க...

தொழில் நுட்பம்வாய்ந்ததெனவும் தானாக இயங்கக்கூடியதொழில் நுட்பம் கொண்டதெனவும் சிறி லங்காவிற்கான அமெரிக்கத்தூதுவர் விடுத்துள்ளசெய்தியில் தெரிவித் துள்ளார்.

சிறிலங்காவில் சொற்பநாட்களே தரித்து நிற்கும் என தெரிவிக்கப் பட்டும் அமெரிக்காவின் இந்த யுத் தக்கப்பல் அதிகாரிகள் அக் காலப்பகுதியில் சிறிலங்காவின் கடற்படை உயரதிகாரிகளையும் சந்திக்க உள்ளதாக சிறிலாங்கா விற்கான அமெரிக்க தூதராலயம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்திய யுத்தக் கப்பலான தாரங்கிரி இன்னமும் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கிறது. (32)

### தென்னாபிரிக்க ...

பெறவில்லை. தேர்தல் வன்முறைக் கலாசாரத்தை சிறிலங்காவின் அரசி யல்வாதிகள் வளர்த்தெடுத்து வரு கிறார்கள். ஆனால் தென்னாபிரிக்க பொதுத்தேர்தல் ஜனநாயக முறைப் படி நீதியாகவும் அமைதியாக வும் இடம்பெற்றுள்ளது. இது உலகத் துக்கு முன்மாதிரி ஆகும் என்றார். தென்னாபிரிக்காவின் இன முரண் பாடுகளுக்கான அரசியல் தீர்வுமுறை உண்மையிலேயே உலக நாடுகளுக்கு அருமையான வழிகாட்டியாகும். இந் தத் தீர்வு முறையை பின்பற்றுவதன் மூலம் எந்தவொரு இனப்பிரச் சினைக்கும் தீர்வு காண்பது சாத்திய மாகும் என்றார். அவர் மேலும் தெரி விக்கையில், ஆபிரிக்க தேசிய காங் கிரஸ் போலவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதிலும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதிலும் புலிகள் இயக்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்றார்.

### பொருண்மிய...

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் அணிவித் ததைத் தொடர்ந்து கலந்துரை யாடல் நடைபெற்றது.

ஆசியுரையினை கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் ஆற்றினார் எதிர் கால திட்டத்தைப்பற்றி பொருண்மிய மதியுரையகத்தின் இயக்குனர் மா.சுந்தரமூர்த்தி விளக்கினார். சிறப்புரையினை தமிழீழ அரசியல் துறைபொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் ஆற்றினார்.இந் நிகழ்வில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின் மாலை 2மணியளவில் வட் டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணைக்குச் சென்று அங்குள்ள திட்டங்களை பார்வையிட்டனர்.(05)

### கருணா...

நிற்கிறது. அங்கே இன்று ஆட்சி பீடம் முழு அளவில் இனவாத அமைப்புக்களினால் சூழப்பட்ட தாகவே இருக்கிறது. ஆகவே இது எவ்வளவு தூரம் தமிழர்களின் அபி லாசைகளைப்பூர்த்தி செய்யப் போகிறது என்பதே இன்று அனை வராலும் எழுப்பப்படுகின்ற கேள்வி.

இந்த நிலையில், நாம் எமது தேசத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். அதற்காக எமது அறிஞர் பெருமக் கள், புத்திஜீவிகள், நிபுணத்துவம் சார்ந்த அனைவரையும் ஒருங் கிணைந்து எமது தேசக் கட்டு மானத்தை கட்டி எழுப்ப வேண்டும். அது நீண்ட நோக்கிலாக இருக்க லாம், தேச விடுதலைக்குப் பின்னா லானதாக இருக்கலாம். இடைக் காலத்திலானதாக இருக்கலாம். எதற்குமே தயார்ப்படுத்தப்பட்ட ஒரு சக்தியாக நாம் இருக்கவேண்டும்.

ஆகவே, அதற்கேற்ற வகையில் தான் எமது பொருண்மிய மதியுரை யகம் செயற்பட வேண்டும். அதுவே எமது தலைவருடைய எதிர்பார்ப்பும், மக்கள் அனைவரது எதிர்பார்ப்பும். அதனை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்.

எமது மக்களுடைய ஆற்றல், எதிர்பார்ப்பு என்பன மிகவும் வித் தியாசமானது. ஒரு இனத்தை அடக்குவதற்கு அதன் வளர்ச்சிக் கான கட்டுமானங்கள் அனைத்தை யும் சிதைக்க வேண்டும். அதே போலவே எமது கட்டுமானங்களை யும் சிங்கள இனவாத அரசு ஆட்கி சிதைத்தது.

இவ்வாறு எமது மண்ணை அழிக்கின்ற சிங்கள அரசின் முயற் சியில் இருந்து அதனை மீட்பதற் காக புலம்பெயர் நாடுகளில் வாழ் கின்ற எமது உறவுகள் தயாராக இருக்கின்றார்கள். நாம் சென்ற நாடு களில் எல்லாம் எம்மிடம் அவர்கள் அதனை தெரிவித்தார்கள். எனவே, நாம் அவர்களை சீரான முறையில் ஒழுங்குபடுத்தி எமது தேசத்தை கட்டி எழுப்ப வேண்டும். இந்த நிலை யில் பெரும் போர்ச் சூழலுக்குள் சிக்குப்பட்டு நலிந்து போன மக களையும் மண்ணையும் சரியாக ஆய்வு செய்து அதற்கேற்ற வகை யில் வேலைத் திட்டங்களை முன் னெடுக்க வேண்டும்.

கடந்த 25 ஆண்டுகாலமாக சிறி லங்கா அரசு இலங்கைத் தீவினு டைய அபிவிருத்திக்காக பெற்ற உதவி கள் எவையும் எமது தாயகத்தின் அபிவிருத்திக்காக வந்து சேரவில்லை அது எமது தாயகத்தை அழிப்ப தற்காகவே பயன்படுத்தப்பட்டிருக் கின்றது. என்ற உண்மையை நாங் கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தி வருகின்றோம்.இன்று எமது பிரதேசம்அனைத்து வழிகளி லும் உறுதிபெற்றிருக்கின்றது இன்று நாம் எமது தேசத்தின் அபிவிருத்தி நோக்கிய கட்டுமானம் நோக்கிய திட்டமிடலில் முழுமைபெற்றிருக்க வேண்டும் இத்திட்டம் பேராசிரியர் துரைராஜா அவர்களால் ஆரம்பிக்கப் பட்டது. அவர் இருந்தகாலத்தில் அறிஞர்களது கல்விமான்களது ஒருங்கிணைப்பு மிக உச்சநிலையில் இருந்தது பின்னைய காலத்தில் போர் நடவடிக்கை காரணமாக சீர் குலைந்து குழப்பமடைந்தாலும் பின்னர் சீர் பெற்று நிற்கின்றது எமது தேசியத் தலைவர் வித்தியாசமான தன்மை யுடையவர். எமதுதேசத்தின் கட்டு மானத்தை சிறப்பான முறையில் கொண்டுசெல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் என அவர் தெரிவித்தார்.

### தியாக...

செயலாளர் பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நினைவுரை களை பிரதேச சபைச் செயலர் கிருஷ்ணப்பிள்ளை, ஆசி ரியை திருமதி விக்னேஸ் வரன், வர்த் தக சங்கத் தலைவர் செ.உதய குமார் ஆகியோர் ஆற்றினர்.

செம்மலை மகாவித்தியாலய மண்டபத்தில் ஆசிரியர் இளங்கோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கடற்புலிகளின் முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி,உபஅதிபர் நரேந்திரன் ஆகியோர் நினைவுரை யாற்றினர்.

புதுக்குடியிருப்பில் நடை பெற்ற நிகழ்வு புதுக்குடியிருப்பு பிர தேச மாவீரர் பணிமனை பொறுப் பாளர் கீத்தாராம் தலைமையில் நடை பெற்றது.

விசுவமடு மாவீரர் அஞ்சலி மண் டபத்திலும் அன்னையின் நினைவு நிகழ்வு நடைபெற்றன.

யாழ் நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள கேணல் கிட்டு ஞாபகார்த்த நினைவுப் பூங்கா பகுதியில் அன்னையின் நினைவாக அடையாள உண்ணா விரதபோராட் டம் நடைபெற்றது.

இது போன்று தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி, சங்கத் தானை முருகன் கோயிலடிப்பகுதி யிலும்.

வடமராட்சி நெல்லியடி,கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடிப் பகுதி யிலும்.

தீவகப்பகுதியில் வேலணை ஐய னார் சனசமூகநிலைய முன்றிலிலும் அதே போன்று ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கிலும் நேற்றுக் காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை அடையாள உண்ணா விரத நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

பாடசாலை மாணவ,மாணவிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர் அவர்களுடன் வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட வெகு ஜன அமைப்புக்களின் பிரதிநிதி களும் திரண்டு வந்து கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை யாழ்.நகரம் உள் ளிட்ட முக்கிய நகரங்கள் மற்றும் சந்திப்பகுதிகளும் அலங்கரிக்கப்பட் டிருந்ததுடன்,அலங்கார பந்தல் களும் நிறுவப்பட்டு அன்னை பூபதியின் உருவப்படமும் அஞ் சலிக்கு வைக்கப்பட்டிருந்தது.

இவற்றுடன் அரச திணைக் களங்கள், கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் என்பவற்றிலும் உருவப்படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றது.

மன்னாரில் மன்னார் நகர மண்ட பத்தில் அன்னைபூபதி நினைவு நிகழ்வுகள் இடம் பெற்றன.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள அன்னை பூபதி நினைவாலயத்தில் உணர்வு பூர்வமாக நிகழ்வுகள் நடைபெற்றது முன்னதாக பிற்பகல் 4 மணியளவில் அன்னை பூபதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்த மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய வாகன தொடரணி மூலம் ஊர்வலமாக பொதுமக்கள் நினை வாலயத்தை சென்றடைந்தனர் நகர அரசியல் துறைப்பொறுப்பாளர் சேனாதி தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

(லோ,சோ,24,ச,20,26,14,27,33,மி)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.